விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 142 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 27 சனிக்கிழமை (10.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### இந்தியா – பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம்

## ஐ.பி.எல் தொடர் நிறுத்தம்

(டில்லி)

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அதிகரித்து வரும் போர்ப் பதற்றம் காரணமாக ஐ.பி.எல் நடப்புத் தொடரை காலவரையறையின்றி ஒத்திவைக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முடிவு செய்துள்ளது.

அத்துடன் இந்தியா-பாகிஸ்தான் இடையே நிலவும் பதற்றம் காரணமாக ஐ.பி.எல் போட்டிகளில் பங்கேற்றுள்ள நாடுகளின் வீரர்கள் அவரவர் நாடுகளுக்கு

15ஆம் பக்கம் பார்க்க

## தலைவரின் அடையாளமே தமிழரசுக் கட்சி வாக்குக்காக கசிப்பு வழங்குபவர்கள் அல்ல!

### அமைச்சர் பிமலின் கருத்துக்கு சிறீதரன் எம்.பி பதிலடி



(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றில் தெரிவித்த கருத்தை மீளப் பெற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தனிநபர் பிரேரணைகள் தொடர்பான விவாதத்தில் வைத்தே பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இதனைத் தெரிவித்திருந்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், "உள்ளூராட்சி

15ஆம் பக்கம் பார்க்க

## நாடு முழுவதும் சுற்றிவளைப்பு
### 405 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது 405 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ்

15ஆம் பக்கம் பார்க்க

### இனவாதத்துக்கு இடமில்லை

# வடக்கு மக்களின் காணி உரிமை உறுதிப்படுத்தப்படும்

### அமைச்சர் வசந்த சமரசிங்க



(கொழும்பு)

நாட்டில் இனவாதத்துக்கு மீண்டும் இடமில்லை. வடக்கு மக்களின் காணி உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் என அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## இறைச்சி விற்பனை நிலையங்கள்
### 3 நாட்களுக்கு பூட்டு

(கொழும்பு)

வெசாக் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 12, 13, மற்றும் 14 ஆகிய மூன்று தினங்களுக்கு இறைச்சி

15ஆம் பக்கம் பார்க்க

### பொலநறுவையில்
## உலங்குவானூர்தி விபத்து: 6 படையினர் உயிரிழப்பு



(பொலநறுவை)

இலங்கை விமானப் படையின் 7ஆவது படைப் பிரிவால் இயக்கப்படும் பெல் 212 உலங்குவானூர்தி நேற்று வெள்ளிக்கிழமை காலை பொலநறுவை மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் விழுந்து

15ஆம் பக்கம் பார்க்க

### மீண்டும் கூட்டமைப்பாகச் செயற்படுவோம்
## தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தமிழரசுக் கட்சி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச்செயற்பட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது என்று அந்தக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே

15ஆம் பக்கம் பார்க்க

### தமிழ்க் கட்சிகள் கோரினால்
## இணைந்து செயற்படுவது குறித்து ஆராய்ந்து முடிவு
### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

தமிழ்க்கட்சிகள்கோரிக்கை முன்வைத்தால் வடக்குக் கிழக்கில் இணைந்து செயற்படுவது குறித்து ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு

02ஆம் பக்கம் பார்க்க

## அராலியில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

அராலி வசந்தபுரத்தில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் வசந்த குமார் (வயது-33) என்பவரே

15ஆம் பக்கம் பார்க்க

## மாணவியின் மரணத்தில் அரசியல் நடத்தாதீர்கள்
### சபையில் மோதிக் கொண்ட சஜித் – பிமல்

(கொழும்பு)

மாணவியின் மரணத்தில் அரசியல் நடத்தாதீர்கள் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கோரியுள்ளார்.

பாராளுமன்றத்தில் குறித்த இருவருக்கும் இடையே நேற்று வார்த்தை மோதல்கள் ஏற்பட்டிருந்தன.

கொட்டாஞ்சேனையில் 15 வயதான பாடசாலை மாணவி தனது உயிரை மாய்த்துக் கொண்டமைக்குக் காரணம்

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மே மாதத்தின் முதல் வாரத்தில்
# 30 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாவிகள் வருகை

மே மாதத்தின் முதல் 7 நாட்களில் 33,910 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 10,620 ஆகும்.

அதன்படி, ஜனவரி மாதம் முதல் மே மாதம் 07 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 930,794 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ம-4,7)

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி
# தமிழரசியல் கைதிகளை விடுவிக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்
## பாராளுமன்றில் கஜேந்திரகுமார் எம்.பி கோரிக்கை

(கொழும்பு)

பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (9) நடைபெற்ற கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படுகின்ற பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மிக மோசமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதாகவும், அதற்கு மாற்றீடாக பிறிதொரு சட்டத்தை இயற்ற போவதில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்றும் நடைமுறையில் தான் உள்ளது. 12 அல்லது 13 தமிழ் அரசியல் கைதிகள் இன்றும் சிறையில் உள்ளார்கள். இந்த சட்டத்தின் பிரகாரம் தவறாக கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை.

எஸ்.கிருபாகரன் எனும் அரசியல் கைதி தொடர்பில் இந்தப் பாராளுமன்றத்தில் பலமுறை பேசியுள்ளேன். அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒரு வழக்கில் நிராகரிக்கப்பட்டது. அந்த வாக்குமூலம் பலவந்தமான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இருப்பினும் அந்த நிராகரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு எஸ்.கிருபாகரன் இன்றும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.



இவரது வழக்குகள் கொழும்பு நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் நியாயமற்ற வகையில் அம்பாந்தோட்டைப் பகுதிக்கு அவர் கொண்டு செல்லப்பட்டுள்ளார். சிறையில் வாடுகிறார்.

அதேபோல் ஆனந்தவர்மன் என்றழைக்கப்படும் அரவிந்தன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஆகவே மிக மோசமான இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை அரசாங்கம் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றார். (ம-4,7)

## வடக்கு...

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கமும், இராணுவமும் இணைந்து வடக்கில் இனவாதத்தைப் பரப்புவதாக கஜேந்திரகுமார் எம்.பி. குற்றஞ்சாட்டினார். இனவாதத்தைத் தோற்கடித்த அரசாங்கம்தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாகும் என்பதை கூறிக்கொள்கின்றேன்.

அதேபோல வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கை ஒரு குடையின்கீழ் கொண்டுவந்த அரசாங்கமே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாகும்.

எனவே இந்நாட்டில் இனவாதத்துக்கு மீண்டும் இடமளிக்கப்படமாட்டாது.

இந்நிலையில் சில காரணங்கள் தொடர்பில் மாயையை தோற்றுவிக்க முற்படுகின்றனர். கடந்த காலங்களிலும் இப்படி நடந்துள்ளது.

எமது நாட்டில் காணிகளை கையகப்படுத்திய அரசியல்வாதிகள் பற்றியும் எதிர்காலத்தில் நாம் கதைப்போம். காணிகளை கையகப்படுத்தி நண்பர்களுக்கு விற்றவர்கள் உள்ளனர். வடக்கிலும் அப்படி நடந்துள்ளது.

இந்நிலையில் வடக்கு மக்களுக்கான காணி உரிமை உறுதிப்படுத்தப்படும். அவர்களுக்குரிய காணியை அவர்கள் சுதந்திரமாக பயன்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார். (ம-4,7)

## இணைந்து...

தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் இணைந்து சபைகளை நிறுவுவது குறித்து தமிழ்க் கட்சிகள் எம்முடன் பேச்சு நடத்தினால் ஆழமாக ஆராய்ந்த பின்னரே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படும்.

வடக்கு, கிழக்கில் இணைந்து சபைகளை நிறுவுவது குறித்து தமிழ்க் கட்சிகள் உத்தியோகபூர்வமாக எந்த அறிவித்தலையும் அரசுக்கு வழங்கவில்லை. அதிகபட்ச சபைகளை நிறுவுவதே அரசின் எதிர்பார்ப்பாகும். ஆழமாக ஆராய்ந்த பின்னரே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படும் என்றார். (ம-4,7)

## மாணவியின்...

நாட்டில் சரியான நடைமுறை பின்பற்றப்படாமையே என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடுமையாகச் சாடியிருந்தார்.

இது தொடர்பில் அரச தரப்பு எவ்வாறான நீதியை வழங்கப்போகிறது எனவும் நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதன்போது குறுக்கிட்ட சபாநாயகர் மாணவி தொடர்பான விடயத்தை பேசவிடாது எதிர்க்கட்சித் தலைவரை அமருமாறு கூறியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, ஆளும் தரப்பின் பிரதம அமைச்சர் பிமல் ரத்நாயக்க கருத்துத் தெரிவிக்கையில், குறித்த மாணவியின் உயிரிழப்பை வைத்து யாரும் அரசியல் செய்ய வேண்டாம் என ஆவேசமாகப் பேசியிருந்தார்.

மேலும் மாணவியின் மரணத்தை விற்று அரசியல் நடத்த வேண்டாம் என தெரிவித்துள்ளார். இந்த மாணவியின் விடயத்தை பெரிய விடயமாக எடுத்துக்கொள்ள வேண்டாம் எனவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-4,7)


மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 08 10 1950 | மறைவு 14 04 2022



அமரர் நடராசா மகாலிங்கம்

(மேனாள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)

திதி : திரயோதசி

வையகம் போற்ற வாழ்ந்து
வானுறையும் தெய்வமானீர்
ஆண்டுகள் மூன்றாகிப் போனாலும்
முழு நிலவாய் பதிந்திருக்கிறது உங்கள் முகம்
தேனினிய உங்கள் குணம் நாடி
காலமெல்லாம் நினைத்திருப்போம்.

பட்டின சபை வீதி,
மானிப்பாய். (1116) குடும்பத்தினர்



3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பு மார்க்கண்டு

தோற்றம் 25.11.1947 | மறைவு 14.04.2022

ஆண்டுகள் மறைந்தாலும் அப்பா!
உங்கள் நினைவுகள் மறைவதில்லை
ஆயிரம் உறவுகள் வந்தாலும்
அப்பா என்ற உறவுக்கு நிகரில்லை

நீங்காத
நினைவுகளுடன் வாடும்
குடும்பத்தினர்

(C-2934)

# வடக்கு மக்களுக்கான காணி உரிமை

## உறுதிப்படுத்தப்படும்: அமைச்சர் திட்டவட்டம்

(கொழும்பு)

**வடக்கு மக்களுக்கான காணி உரிமை உறுதிப்படுத்தப்படும் அதேவேளை அவர்களுக் குரிய காணியை அவர்கள் சுதந்திரமாக பயன்படுத்த முடியும் என அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அர சாங்கமும் இராணுவமும் இணைந்து வடக்கில் இன வாதத்தைப் பரப்புவதாக கஜேந்திரகுமார் எம்.பி. குற்றஞ் சாட்டினார்.

இனவாதத்தை தோற்கடித்த அரசாங்கம்தான் தேசிய மக் கள் சக்தி அரசாங்கமாகும் என்பதை கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கை ஒரு குடையின்கீழ் கொண்டுவந்த அரசாங்கம் தான் தேசிய மக் கள் சக்தி அரசாங்கமாகும். எனவே, இந்த நாட்டில் இன வாதத்துக்கு மீண்டும் இடம ளிக்கப்படமாட்டாது.

இந்நிலையில் சில கார ணங்கள் தொடர்பில் மாயையை தோற்றுவிக்க முற்ப டுகின்றனர். கடந்த காலங் களிலும் இப்படி நடந்துள்ளது. எமது நாட்டில் காணிகளை கையகப்படுத்திய அரசியல் வாதிகள் பற்றியும் எதிர் காலத்தில் நாம் கதைப்போம். காணிகளை கையகப்படுத்தி நண்பர்களுக்கு விற்றவர்களும் உள்ளனர்.

வடக்கிலும் அப்படி நடந் துள்ளது. இந்நிலையில் வடக்கு மக்களுக்கான காணி உரிமை உறுதிப்படுத்தப்படும். அவர் களுக்குரிய காணியை அவர் கள் சுதந்திரமாக பயன்படுத்த முடியும் எனவும் தெரிவித் தார். (நி-8)

# விசேட சுற்றிவளைப்பு

## 405 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களு டன் 405 பேர் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 99 பேரும், ஐஸ் போதைப் பொரு ளுடன் 221 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 85 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, 110 கிராம் 716 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொரு ளும், 127 கிராம் 254 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொரு ளும், 741 கிராம் 255 மில்லி கிராம் கஞ்சா போதைப் பொரு ளும் பொலிஸாரால் கைப்பற் றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள் ளது. (நி-8)

# புதிய மின் கட்டண சீராக்கம்

## ஜூன் அல்லது ஜூலையில் அமுலாகும்

(கொழும்பு)

புதிய மின் கட்டண சீராக்கம் தொடர்பான யோசனையை, இலங்கை மின்சார சபை இம் மாதம் 15ஆம் திகதி இல ங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு வழங் கவுள்ளதாகத் தெரிவிக்கப்ப டுகிறது.

இந்த ஆண்டின் இரண் டாவது மின் கட்டண சீராக்கம் தொடர்பான யோசனையாக இது அமையவுள்ளது.

இதன்படி புதிய மின்சார கட்டண சீராக்கம் எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் அமுலாகும் என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின்சார கட்டணமானது அதன் செலவுகளைப் பிரதி பலிக்கும் வகையில் அமைய வேண்டும் என்று, சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# புதிய போப்பாண்டவருக்கு ஜனாதிபதி அநுர வாழ்த்து



(கொழும்பு)

கத்தோலிக்க திருச்சபை யின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பரிசுத்த பாப்பரசர் 14 ஆம் லியோவுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித் தார்.

தனது வாழ்த்துச் செய் தியில், போப்பாண்டவரின் மகத்தான பொறுப்பை ஒப்புக்கொண்ட ஜனாதிபதி, உலகளாவிய கத்தோலிக்க சமூகத்தை வழிநடத்தும் போப் லியோ XIV பலத்தையும் ஞானத்தையும் பெற வாழ்த்தி னார்.

"உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு உங்கள் தலைமை நம்பிக்கையையும் உத்வேகத் தையும் கொண்டு வரட்டும்" என்று ஜனாதிபதி அநுரகுமார, இலங்கை மக்கள் சார்பாக அன் பான வாழ்த்துக்களைத் தெரி வித்தார். (நி-8)

# ஹெலிகொப்டர் விபத்து 6 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான பெல் 212 ரக ஹெலிகொப்டர் ஒன்று நேற்றுக் காலை விபத்துக் குள்ளானது.

ஹெலிகொப்டர் விபத்தில் மீட்கப்பட்டு வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட 12 பேரில் 6 பேர் உயிரிழந்துள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு விமானிகள் உட் பட 12 பேர் ஹெலிகொப்டரில் பயணித்திருந்த நிலையில் அவர்கள் அனைவரும் மீட் கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# பணத்துக்காக சோரம் போக மாட்டோம்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

சில உளளூர் சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு ஆளுங் கட்சி எமது உறுப்பினர்களின் ஒத்துழைப்பைக் கோரியுள் ளதாகவும் எமது உறுப்பி னர்கள் பணத்துக்காக சோரம் போகமாட்டார்கள் என்றும் தேசிய சுதந்திர முன்ன ணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கட்சித் தலைமை அலு வலத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஒரு சில உள்ளூராட்சி சபைகளில் எங்களின் உறுப் பினர்களைத் தவிர ஆளுங் கட்சிக்கு 23 ஆசனங்களும் எதிர்க்கட்சிக்கு 23 ஆசன ங்களும் கிடைத்துள்ளன.

எனவே, ஒருசில பகுதி களில் எங்களின் உள்ளூராட்சி உறுப்பினர்களின் பங்களிப்பு மிக தீர்மானம்மிக்கதாக இருக்கிறது.

தற்போது பல் வேறு சூட்சுமங் களைப் பயன்படு த்தி எங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் நிலை மைக்கு ஆளுங்கட்சி தள்ளப் பட்டுள்ளது.

எனவே, எமது கட்சியி லுள்ள உறுப்பினர்கள் பணத் துக்காக சோரம் போகமாட்டார் கள் என்பதை நாங்கள் உறு தியாக நம்புகிறோம்.

அதேபோன்று எந்தவொரு கட்சிக்கும் ஒத்துழைப்பு வழங்க நாங்கள் இதுவரையில் தீர்மா னம் எதுவும் எடுக்கவில்லை என்று அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (நி-8)

# சுயாதீன அரச சட்டத்தரணிகள் அலுவலகத்தை நிறுவ ஒப்புதல்

(கொழும்பு)

இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பில் தாம தங்களைக் குறைப்பதற்கும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கும் ஒரு சுயாதீனமான அரச சட்டத் தரணிகள் அலுவலகத்தை நிறுவுவதற்கான முன் மொழிவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

அரசாங்கத்தின் தற் போதைய தேர்தல் அறிக்கை [illegible] சேர்க்கப்பட்டுள்ள இந்த முயற்சி, சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து தனித்தனியாக மாகாணத் துணை அலுவலகங்களைக் கொண்ட ஒரு சட்டத்தரணிகள் அமைப்பை உருவாக்க முன் மொழிகிறது.

இந்த நடவடிக்கை பொதுமக் களின் நம்பிக்கையை மேம் படுத்தவும் குற்றவியல் வழக் குகளை விரைவாகக் கையா ளவும் நோக்கமாகக் கொண் டுள்ளது.

புதிய அலுவலகத்திற்குத் தேவையான சட்டக் கட்ட மைப்பை ஆய்வு செய்வதற்காக உயர் நீதிமன்ற நீதிபதியும் ஜனாதிபதி ஆலோசகருமான யசந்த கோடகொட தலைமை யிலான தொழில்நுட்ப நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சட்டங்களில் தேவையான திருத்தங்களை யும் இந்தக் குழு பரிந்து ரைக்கும்.

இந்த முன்மொழிவு, இலங் கையில் ஒரு சுயாதீன வழக்குரைஞர் அதிகாரத்தை அவசரமாக நிறுவுவதற்கு அழைப்பு விடுத்த, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக ளுக்கான உயர் ஸ்தானிகர் 2024 செப்ரெம்பரில் அளித்த பரிந்துரைகளுடன் ஒத்துப்போ கிறது. (நி-8)

# சாவகச்சேரி இந்து - மானிப்பாய் இந்து இடையேயான துடுப்பாட்ட சமர் இன்று





யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டச் சமர் இன்று (10), நாளை (11) யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் குறித்த இரு கல்லூரிகளுக்கும் இடையிலானகிரிக்கெட் போட்டி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

# பாகிஸ்தானுடன் இந்தியா விளையாடவே கூடாது- கம்பீர்



பயங்கரவாதம் நிறுத்தப்படும் வரை பாகிஸ்தானுடனான சகல விதமான கிரிக்கெட் போட்டிகளையும் முற்றாக நிறுத்த வேண்டும் என இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுநர் கௌதம் கம்பீர் அறைகூவல் விடுத்துள்ளார்.

பஹல்காம், நகரில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலை அடுத்தே கம்பீர் இந்த அறைகூவலை விடுத்துள்ளார்.

டில்லியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பல அணிகள் பங்கேற்கும் போட்டிகளில் பாகிஸ்தானுடன் இந்தியா தொடர்ந்து விளையாட வேண்டுமா என்று கேள்வி எழுப்பப்பட்ட போது, "இதற்கு என்னுடைய தனிப்பட்ட பதில் முற்றிலும் இல்லை" என்று கம்பீர் பதிலளித்தார்.

இது இவ்வாறிருக்க, 2013 ஜனவரி மாதத்திலிருந்து பாகிஸ்தானுக்கு எதிராக இருதரப்பு கிரிக்கெட் தொடர்களில் இந்தியா விளையாடவில்லை. ஆசிய கிண்ணம், ஐ.சி.சி கிரிக்கெட் போன்ற பன்னாட்டுப் போட்டிகள் ஆகியவற்றிலேயே இரண்டு அணிகளும் ஒன்றையொன்று எதிர்த்தாடியுள்ளன.

மிக அண்மையில் டுபாயில் நடைபெற்ற 2025 சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இரண்டு நாடுகளும் ஒன்றையொன்று எதிர்த்தாடி இருந்தன.

இந்தியாவில் இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ள ஐ.சி.சி மகளிர் உலகக் கிண்ணம், அடுத்த வருடம் நடைபெறவுள்ள ரி-20 ஆசிய கிண்ணம் ஆகிய போட்டிகளில் இரண்டு அணிகளும் சந்திக்க வாய்ப்புள்ளது.

"இறுதியில், அவர்களுடன் நாங்கள் விளையாடுவதா இல்லையா என்பதை அரசாங்கம் தான் தீர்மானிக்க வேண்டும்" என கம்பீர் கூறினார்.

"நான் இதை ஏற்கனவே கூறியுள்ளேன். இந்தியப் படையினர் மற்றும் இந்தியப் பிரஜைகளின் உயிர்களை விட கிரிக்கெட் போட்டியோ, பொலிவுடோ அல்லது வேறு எந்த விடயமும் முக்கியம் அல்ல. போட்டிகள் தொடர்ந்து நடைபெறும், திரைப்படங்கள் தயாரிக்கப்படும், பாடகர்கள் தொடர்ந்து நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். ஆனால், அவை எதுவும் உங்கள் குடும்பத்தில் அன்புக்குரியவர் ஒருவரை இழப்பதற்கு ஈடாக முடியாது.

"இது என்னுடையது அல்ல, என்னுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டது அல்ல, இது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, மிக முக்கியமாக, நாங்கள் அவர்களுடன் விளையாடலாமா இல்லையா என்பதை அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும்" என கம்பீர் தெரிவித்தார்.

"அவர்கள் என்ன முடிவு எடுத்தாலும், நாம் அதை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும், அதை அரசியலாக்கக் கூடாது" எனவும் அவர் தெரிவித்தார். (நி-8)

### பாகிஸ்தான் சூப்பர் லீக் தொடரை

## தமது நாட்டில் நடத்துவதற்கு

## ஐக்கிய அரபு இராச்சியம் மறுப்பு

கடந்த பாகிஸ்தான் சூப்பர் லீக் தொடர் தமது நாட்டில் நடத்துவதற்கு ஐக்கிய அரபு இராச்சியம் மறுத்துள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போரின்போது, அண்மையில், இந்தியா நடத்திய ட்ரோன் தாக்குதலில் ராவல்பிண்டி கிரிக்கெட் மைதானம் அருகே பலத்த சேதம் ஏற்பட்டது.

இதனால் பாகிஸ்தான் சூப்பர் லீக் தொடரில் விளையாடிய வீரர்கள் அனைவரும் பயந்து தங்களது நாட்டிற்கு செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

இதனையடுத்து, பாகிஸ்தான் சூப்பர் லீக் போட்டிகள் நிறுத்தப்பட்டு அவற்றை ஐக்கிய அரபு இராச்சியத்தில நடத்த பாகிஸ்தானிய கிரிக்கெட் சபை திட்டமிட்டது எனினும், இது தொடர்பான பாகிஸ்தானின் கோரிக்கையை ஐக்கிய அரபு இராச்சியம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்தியாவுடன் தற்போது மோதல் போக்கை பாகிஸ்தான் கடை பிடித்து வருவது ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இந்தியாவை எதிர்த்துக் கொண்டு போட்டிகளை நடத்த முடியாது என்று ஐக்கிய அரபு இராச்சியம் தெரிவித்து விட்டதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இதேவேளை போர்க் காரணமாக நிறுத்தப்பட்டுள்ள ஐபிஎல் போட்டிகளின் தொடர், எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடத்தப்படும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. (ம-4,7)

# நாட்டில் உயரும் டெங்கு நோயாளர்கள்

## ஏழு பேர் இதுவரையில் உயிரிழப்பு

(கொழும்பு)

**நாடு முழுவதும் நடப்பாண்டில் இதுவரை 19,000 இற்கும் மேற்பட்டோர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர் என்று மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**

இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்குப் பரவல் பெருமளவில் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும், அப்பகுதியில் உள்ள பல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தொடர்ந்து அதிக எண்ணிக்கையிலான டெங்கு பாதிப்புகளைப் பதிவு செய்து வருகின்றன.

இதையடுத்து, அதிக ஆபத்துள்ள பிரிவுகளை இலக்காகக் கொண்டு, நுளம்பு இனப்பெருக்கம் செய்யும் இடங்களை அகற்றுதல், பொது விழிப்புணர்வு மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பிரசாரம் மே 19 முதல் மே 24 வரை நடைபெறும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அறிவித்துள்ளது. (நி-8)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானமானி சாதாரண/ சிறப்புப் பட்டம் (உயிரியல் மற்றும் பௌதிக விஞ்ஞானத்தில்) கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கல்விப் பொதுத்தராதர உயர்தர விஞ்ஞானப் பிரிவுப் பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் /ஒன்றிற்கு மேற்பட்ட அமர்வுகளில் சித்தி பெற்றிருந்தாலும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 13.05.2025 வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண்வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 222 3374 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-8)

# போயா தின ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்பாணம் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் போயா தினக் கருத்துரையும் கலந்துரையாடலும் தொடரில் நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப 4 மணிக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி ஆய்வு அலுவலர் வசந்தராஜ் "மக்களின் ஐக்கியமும் விழிப்புணர்வும் இன்றி பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு சாத்தியமா?" எனும் தொனிப்பொருளில் ஆய்வுக்கருத்துரை வழங்குவார்.

1134, கே.கே.எஸ் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள தேசியக் கலை இலக்கியப் பேரவையின் தலைமைப் பணிமனையின் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிந்துள்ளனர். (நி-8)

# வாழைக்குலை விலையில் வீழ்ச்சி வாழைச் செய்கையாளர்கள் பாதிப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழைக்குலை விலையில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி காரணமாக வாழைச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 15ரூபா தொடக்கம் 20 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுவதால் தமது உற்பத்தி செலவுக்கேற்ப விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படுவதாக செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குருவிகளும் குரங்குகளுமே அவற்றை சாப்பிட்டு அழிப்பதாகவும் இதனால் நாம் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் கவலை தெரிவித்தனர்.

சந்தைக்கு கொண்டு போய் கொடுப்பதற்கான செலவு விற்பனை செய்கின்ற வாழைக் குலையில் கிடைக்காத நிலையில் வாழை மரங்களுடன் வாழைக்குலைகளை அப்படியே விட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (நி-8-316)


அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 10.04.2025 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தின் தலைவர்

அமரர் ஆறுமுகம் சிவானந்தம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 10.05.2025 இன்று சனிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் திக்கம் காளி பரமேஸ்வரி அம்பாள் ஆலயமுன்றலில் நடைபெறும் அந்நிகழ்விலும் எமது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

அல்வாய் வடமேற்கு, திக்கம்.

தகவல்: குடும்பத்தினர்


# இராசிபலன்

10.05.2025
சித்திரை 27, சனிக்கிழமை
திரயோதசி முன்னிரவு 6.32 மணிவரை
சித்திரை பின்னிரவு 4.04 மணிவரை

சுபநேரம் 2.54-4.24 மணிவரை
இராகுகாலம் 8.54-10.24மணிவரை
சித்திரைச் சித்திரை,

சனிப்பிரதோசம்
சந்திராஷ்டமம் - அனுசம், கேட்டை

வளவன்

**மேஷம்**: நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், மறக்க முடியாத இனிய சம்பவம் ஒன்று இடம்பெறலாம், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்**: புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**துலாம்**: புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்**: சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்திகரமானதாக அமையும், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்**: தொழில் சம்பந்தமாக இருந்த குழப்பங்கள் அகலும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிம்மம்**: சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்.

**விருச்சிகம்**: பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்**: நேற்றைய பணியொன்றை இன்றும் தொடரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்**: பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.

**கன்னி**: சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூரத்தியாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு**: இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மீனம்**: வரவும் செலவும் சமனாகும் நாள், குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**கடவுள் சம்பளத்தை வாழ்க்கையின் முடிவில்தான் தருகிறார்.**

# பருத்தித்துறைப் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய வெதுப்பகம், உணவகத்திற்கு சீல்

## 70 ஆயிரம் ரூபா தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நகர சபைக்கு உட்பட்ட பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த வெதுபபகம் மற்றும் உணவகம் ஏன்ப வற்றுக்கு 70 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் வெதுப்பகப் பொருட்களை கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, வெதுப்பகச் சுற்றாடலில் இலையான்கள் பெருக இடமளித்தமை, அழுகலடைந்த உருளைக் கிழங்குகளை உணவு தயாரிப்பிற்கு களஞ்சியப் படுத்தியமை, வெதுப்பகப் பொருட்களுடன் தொற்று ஏற்படும் வண்ணம் இரசாயனப் பொருட்களை களஞ்சியப் படுத்தி வைத்திருந்தமை, ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் ப.தினேஸ் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

குறித்த வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போது , தன் மீதான குற்றச்சாட்டை உரிமையாளர் ஏற்றுக்கொண்டதை அடுத்து , உரிமையாளரை கடுமையாக எச்சரித்த மன்று , 50 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது.

அதேவேளை மருத்துவ சான்றிதழ் இல்லாமல் உணவினை கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, குடிப்பதற்கும் சுத்திகரிப்பிற்கும் பயன்படும் நீரானது குடிக்கத்தக்கது என உறுதி செய்ய தவறியமை, சமைத்த மற்றும் சமைக்காத உணவுப் பொருட்களை தொற்று ஏற்படும் வண்ணம் களஞ்சியப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் உணவக உரிமையாளருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் உரிமையாளர் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதை அடுத்து , உரிமையாளரை கடுமையாக எச்சரித்த மன்று 20 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது. (நி-8-33)





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சேர். பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் நடனத்துறையினால் முதன்முறையாக உலக நடன தினம் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். பரதநாட்டிய கச்சேரி அமைப்பு முறைப்படி அலாரிப்பு, ஜதீஸ்வரம், கௌத்துவம், வர்ணம், கீர்த்தனை, அஷ்டபதி, ஜாவளி, தில்லானா, மங்களம் ஆகிய உருப்படிகள் மேடையேற்றப்பட்டன.

## யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளித் தொல்லை நீங்க, தைராய்டு பிரச்சினை தீர, எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்துள்ள மனவளக் கலைப் பேராசிரியர் சு.காமாட்சி அவர்கள் வழங்குவார்கள். தொடர்புகளுக்கு 021 222 2772, 076 857 1395. (நி-8)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞான வைரவர் கோவிலடி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் சனசமூக நிலையத் தலைவர் இரா. ஜெயக்குமார் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் "எமது வாழ்வும் சவால்களும்" எனும் தொனிப் பொருளில் "வளர்" சஞ்சிகை ஆசிரியர் (பிரான்ஸ்) மனோ சின்னத்துரை கருத்துரை வழங்கவுள்ளார். (நி-8)



தென்மராட்சி மட்டுவில் சபீனா முன்பள்ளிக்கு சுன்னாகம் பாரம் பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக அண்மையில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கி வைக்கப் பட்டிருந்தது. எனிபன்ற் எயிட் ஹெல்பிங் கியூமன் அமைப்பின் நிதி உதவியுடன் மேற்படி உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படம்:-சுபேசன்)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 400 | 450 | 450 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 210 | 240 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 200 | 160 | 200 |
| தக்காளி | 1000 | 1000 | 1000 | 1000 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 300 | 250 | 200 |
| கோவா | 500 | 500 | 500 | 400 | 600 |
| கரட் | 1000 | 900 | 1000 | 900 | 1000 |
| பூசணி | 200 | 180 | 200 | 180 | 200 |
| புடோல் | 300 | 200 | 300 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 250 | 120-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 150 | 130 | 120 | 160 |
| பாகற்காய் | 1000 | 650 | 600 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 250 | 500 |
| கருணைக் கிழங்கு | 350 | 340 | 250 | 200 | 400 |
| பயற்றங்காய் | 350 | 250 | 350 | 350 | 400 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 600 | 500 | 600 | 500 | 600 |
| கறிமிளகாய் | 650 | 600 | 500 | 450 | 800 |
| முருங்கைக்காய் | 2500 | 3000 | 2000 | 2000 | 2000 |
| போஞ்சி | 800 | 900 | 600 | 500 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 450 | 350 | 400 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 150 | 80-150 | 150 | 60 | 100 |
| தேசிக்காய் | 300 | 400 | 300 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 150 | 120-200 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 450 | 700 |
| வெங்காயப்பூ | 650 | 500 | 600 | 500 | 800 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 100 | -- |

# மாகாண சபைத் தேர்தல் விரைவில்!

## அரசாங்கம் தீவிர கவனம்

**(கொழும்பு)**

**பல வருடங்களாக ஒத்திவைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களை இனியும் தாமதிக்காமல் விரைவில் நடத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்துவதற்குத் தேவையான சட்டங்களைத் திருத்துவதற்கு அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்படும் என்று ஆளும் கட்சி பல சந்தர்ப்பங்களில் தெரிவித்துள்ளது.

தேவையான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின் போது, மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்துவதன் முக்கியத்துவமும் இரு நாடுகளின் கூட்டு அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது. (நி-8)

# பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

2024/2025 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான நிகழ்நிலை விண்ணப்பங்கள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, உயர் தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 09 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை சமர்ப்பிக்கலாம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-8)

# நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற குருமுதல்வரின் நினைவுப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீன குரு முதல்வரின் நினைவு பிரார்த்தனை வைபவமும் அஸ்தி பிரதிஷ்டை நிகழ்வும் நேற்று வெள்ளிக்கிழமை நல்லை ஆதீனத்தில் இடம் பெற்றது.

ஸ்நபன அபிஷேகம் முத்தமிழ்க்குருமணி நா.சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

சித்தாந்த பண்டிதர் கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் பூஜை வழிபாடுகளை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வரின் அஸ்தி பிரதிஷ்டை நிகழ்வு கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது. (நி-8-33)

# நாட்டில் அதிகரிக்கும் வன்கொடுமைகள்

# சபையில் சஜித் சீற்றம்



(கொழும்பு)

நாட்டில் அதிகரிக்கும் வன்கொடுமை சம்பவங்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த விடயத்தை நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமிகளை இலக்கு வைத்து நடத்தப்படும் வன்கொடுமைகள் மற்றும் பிற தவறான செயல்கள் குறித்து ஊடகங்களில் ஒவ்வொரு நாளும் பல்வேறு செய்திகளைப் பார்க்கிறோம்.

சமீபத்திய சம்பவங்களாக அநுராதபுரத்தில் பெண் மருத்துவர் ஒருவர் தகாதமுறைக்குட்படுத்தப்பட்ட சம்பவத்தையும், கொட்டாஞ்சேனை பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான சம்பவத்தையும் குறிப்பிடலாம்.

இது போன்ற சம்பவங்கள் நிகழும் போது, சம்பிரதாய முறைகளைப் பின்பற்றி நடந்து கொள்வதற்குப் பதிலாக உடனடியாகச் செயற்பட்டு தகாத முறைக்குட்படுத்தப்பட்ட அல்லது வன்கொடுமைக்கு ஆளான பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்யத் தேவையான பொறிமுறையை ஸ்தாபிக்க வேண்டும்.

பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையுமாகும்.

இந்தக் கடமையை நிறைவேற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது கொள்கை வகுப்பாளர்களாகிய நமது பொறுப்பாகும்" என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)


# மணிவிழா வாழ்த்துக்கள்



## திருமதி. லீலா ஓம்ஹறி செல்வப்பிரகாச நாயகம்

(விவசாயமும் தொழில்நுட்பமும்)

எமது பாடசாலையில் 09.05.2025 வரை விவசாயமும் தொழில்நுட்பப் பாட ஆசிரியராகக் கடமையாற்றி 10.05.2025 இன்று ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியரை இதுவரை தாங்கள் பாடசாலைக்கு ஆற்றிய சேவைக்காக பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவிப்பதுடன் தங்களின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைவதற்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன், மணிவிழா வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

Best Wishes!

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/ இணுவில் இந்துக்கல்லூரி.

(4123)



## வட மாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்(வ-து), கிளிநொச்சி

## பணிநிலை வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரல்

எமது வடமாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பதவி** : **பொது முகாமையாளர் 101/02**

**2. சம்பள குறியீட்டு இல** : 101/02 (சுற்று நிருப இல.01/2021)

**3. சம்பள அளவுத்திட்டம்** : 27580.00-520.00X10-555.00X10-38330.00

இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கைகளுக்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்

**4. தகைமைகள் -**

அ) கூட்டுறவு ஊழியர் 3 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 4 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் / அதற்குச்சமமான தகைமை. இத்தகைமையானது கணக்கியல் வியாபாரப் புள்ளிவிபரவியல் / வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். / இலங்கைத்தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் /முகாமைத்துவம் / வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி. அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 10 ஆண்டு கால அனுபவம். / க.பொ.த.உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 11 ஆண்டு கால அனுபவம்.

**5. பொதுவான நிபந்தனைகள்**

1. வயதெல்லை 18-45 இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
2. கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட வேண்டும்.
3. தங்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், மேலதிக கல்வித்தகைமைச் சான்றிதழ், மேலதிக துறைசார் சேவைச் சான்றிதழ், சமூக நலன் செயற்பாடுகளுடனான சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.
4. மேற்படி பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்க சட்ட திட்டங்களுக்கு அமைய உரிய பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
5. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் சான்றிதழ்கள், பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**6. விண்ணப்பிக்கும் முறை**

❖ மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை தலைவர், வட மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 155 ஆம் கட்டை, A 9 சாலை, கிளிநொச்சி. என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

❖ கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

7. **விண்ணப்ப முடிவு திகதி :- 2025.06.05**

**தலைவர்,**

**வடமாகாண பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம், கிளிநொச்சி.**

**2025.05.10**

(சி-2930)

## பாரதம்

# நிலைமையைத் தணிக்க விரும்புகிறோம்

# தொடருமானால்...!

## பகிரங்க மிரட்டல் விடுக்கும் பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

**இந்திய தரப்பின் தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதன் காரணமாக பாரிய மோதல் ஒன்று உடனடியாக நிகழும் என்பதில் தனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. இந்தியாவின் நடவடிக்கைகளால் பதற்றங்கள் தொடர்ந்து அதிகரிக்கும் என பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் சர்வதேச ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையில், "அவர்கள் கிட்டத்தட்ட 78 விமானங்கள் மூலம் எங்களைத் தாக்கினர், மேலும் ஐந்து விமானங்கள் எங்கள் விமானப் படையால் சுட்டு வீழ்த்தப்பட்டன.

இது கடந்த மூன்று முதல் நான்கு நாட்களாக நடந்து வருகிறது. நாங்கள் நிலைமையை தணிக்க விரும்புகிறோம், ஆனால் இந்தியத் தரப்பிலிருந்து தொடர்ச்சியான ஆக்கிரமிப்பால் நாங்கள் பதிலடி கொடுக்க கட்டாயப்படுத்தப்படுகிறோம். எனவே இந்த மோதல் விரிவடையும் வாய்ப்பு மிகவும் தெளிவாகவும் உள்ளது,"

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான கட்டுப்பாட்டுக் கோட்டிலும், இரு நாடுகளுக்கும் இடையிலான சர்வதேச எல்லையிலும் இந்த மோதல்கள் நடக்கக் கூடும் என்றும் கவாஜா ஆசிப் மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

# அடித்து நொருக்கும் இந்தியா

## சர்வதேசத்திடம் சரணடையும் பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

சர்வதேச நாடுகளின் தலைவர்கள் தலையிட்டு போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் பாகிஸ்தானில் இருந்து கோரிக்கை பறந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா, ஜப்பான், சீனா மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடைய தலைவர்களுடன் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் பிரதமர் ஆகியோர் தொலைபேசி வாயிலாக பேசி தாக்குதலை நிறுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாகிஸ்தானுடைய பொருளாதாரத்தை சீர்குலைக்கும் செயலில் எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் இந்தியாவுடன் எல்லை பிரச்சினை விவகாரத்தில் ஒரு முடிவு ஏற்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் நிர்வகிக்கும் காஷ்மீர் பகுதிகளை பிரிக்கும் கட்டுப்பாட்டு கோட்டில் நடந்த மோதல்களில், இந்தியாவின் 40 முதல் 50 வரையான சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சர் அதாவுல்லாஹ் தரார் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார்.

இதுவிடயம் குறித்து இந்தியா இதுவரை எந்த மறுப்பு அறிக்கைகளையும் வெளியிடவில்லை. (நி-8)



# இந்திய தலைநகர் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது!



இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் இந்திய தலைநகர் புது டில்லி பாதுகாப்பு வலயத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி டில்லி நகரின் வரலாற்று நினைவுச் சின்னங்களை சுற்றி பொலிஸார் பாதுகாப்பை பலப்படுத்தி உள்ளனர். செங்கோட்டை மற்றும் குதுப் மினார் போன்ற அடையாளச் சின்னங்களுக்கு அருகில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் இந்தப் பகுதிகளில் அதிகளவான பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநிலம் முழுவதும் பாதுகாப்பு மேம்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கண்காணிப்பு கமராக்கள் மூலம் கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயற்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை இந்திய இராணுவம் "ஆப்ரேஷன் சிந்தூர்" நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது.

இதைத் தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் உருவாகியுள்ள நிலையில் ஜம்மு-காஷ்மீரின் மேற்கு எல்லையில் நேற்று முன்தினம் திடீர் ஏவுகணை, ட்ரோன் தாக்குதல்களை பாகிஸ்தான் நடத்தியதுடன் இந்த தாக்குதல் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இந்தியா - பாகிஸ்தான் பதற்றத்தை தணிக்க தயார்

## சீனா தெரிவிப்பு



(பீஜிங்)

இந்தியா - பாகிஸ்தான் இடையில் நிலவும் பதற்றத்தை தணிக்கத் தயார் என சீனாவின் வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், இந்தியா - பாகிஸ்தான் இடையில் நிலவும் தற்போதைய நிலவரம் கவலை அளிக்கிறது. நிலைமையை மேலும் சிக்கலாக்காமல் நிதானம், அமைதி, பொறுமையை கடைபிடிக்க வேண்டும். சர்வதேச சட்டத்தை கடைபிடிக்க வேண்டும்.

சீனாவின் நிலைப்பாட்டை இருநாடுகளின் தரப்பிலும் தெரிவித்து விட்டோம். அனைத்து வகையான பயங்கரவாதத்தையும் எதிர்க்கிறோம். உலக நாடுகளுடன் இணைந்து செயற்பட தயாராக இருப்பதாக சீனாவின் வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் லின் ஜியான் தெரிவித்தார்.

முன்னதாக, இந்தியா-பாகிஸ்தான் மோதலில் நாங்கள் தலையிட மாட்டோம். இருநாடுகளுக்கிடையே இது பிராந்திய போராகவோ, அணுஆயுதப் போராகவோ மாற வேண்டாம் என எதிர்பார்க்கிறோம்.

அதிகபட்சமாக போர் பதற்றத்தைக் குறைக்க முயற்சி எடுக்க முடியும் என்று அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் தெரிவித்து இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# லாகூரை விட்டு வெளியேறுமாறு அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை

(வோஷிங்டன்)

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா கடந்த 7ஆம் திகதி நள்ளிரவில் சுமார் 25 நிமிடத்திற்குள் காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு பகுதிகளில் உள்ள 9 பயங்கரவாத இலக்குகளை தாக்கி அழித்தது.

இதனால், பாகிஸ்தான் இராணுவம் இந்திய எல்லையில் தன்னிச்சையாக அத்துமீறி குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்தியது. இதில் 16 பேர் உயிரிழந்தனர்.

இதற்கிடையே நேற்றிரவு ஏவுகணை மற்றும் ட்ரோன் மூலம் இந்திய பகுதியை குறிவைத்து பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது.

குறிப்பாக அவந்திபூரா, ஸ்ரீநகர், ஜம்மு, பதான்கோட், அமிர்தசரஸ், கபூர்தலா, ஜலந்தர், லூதியானா, அதம்பூர், பதிண்டா, சண்டிகார், நநல், பலோடி, உட்டார்லை, பூஜ் ஆகிய இடங்களில் உள்ள இராணுவ இலக்குகளை குறிவைத்து ட்ரோன் மற்றும் ஏவுகணைகள் மூலம் பாகிஸ்தான் சரமாரி தாக்குதல் நடத்தியது.

இந்திய விமானப்படை எஸ்-400 சுதர்ஷன் சக்ரா வான் பாதுகாப்பு ஏவுகணை சிஸ்டம் மூலம் அவைகள் தாக்கி அழிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை இந்திய வான் பாதுகாப்பு சிஸ்டம் உள்ளிட்டவை சிறப்பாக தடுத்து அழித்தது. மேலும், லாகூரில் இந்திய இராணுவம் ட்ரோன் தாக்குதல் நடத்திய நிலையில், லாகூர் நகரை விட்டு வெளியேறுமாறு அமெரிக்கர்களுக்கு அந்நாட்டு அரசு அறிவுறுத்தி உள்ளது.

பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து அந்நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லாகூரை விட்டு வெளியேற முடியவில்லை என்றால் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (நி-8)

# அமெரிக்கா உடனான கனிம ஒப்பந்தத்திற்கு உக்ரைன் பாராளுமன்றம் ஒப்புதல்

(கீவ்)

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி படையெடுத்தது. முதலில் உக்ரைன் பின்வாங்கிய நிலையில் ரஷ்யா ஏராளமான பகுதிகளை பிடித்தது. பின்னர் அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் ஆதரவுடன் உக்ரைன் பதிலடி கொடுத்து பல பகுதிகளை மீட்டது. மூன்று ஆண்டுகள் நிறைவடைந்து 4ஆவது வருடமாக இரு நாடுகளுக்கும் இடையில் போர் நடைபெற்று வருகிறது.

இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

அமெரிக்கா உக்ரைன் மற்றும் ரஷ்யா உடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதற் கிடையே உக்ரைனில் உள்ள அரிய கனிமங்களை எடுத்துக் கொள்ள உக்ரைனுடன் ஒப்பந்தம் போட்டுக்கொள்ள ட்ரம்ப் விரும்பினார். முதலில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சம்மதம் தெரிவிக்கவில்லை. பின்னர் ஒப்புக்கொண்டார்.

இந்த நிலையில் இந்த ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதற்கான வாக்கெடுப்பு உக்ரைன் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. அப்போது ஒருமனதாக ஒப்பந்தத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

வாக்கெடுப்பு வெற்றிபெற 226 வாக்குகள் தேவை என்ற நிலையில், 338 வாக்குகள் ஆதரவாக விழுந்தன. எந்தவொரு உறுப்பினரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை அல்லது புறக்கணிக்கவில்லை என உக்ரைன் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# சட்டவிரோதமாக தங்கியிருந்த 34 பங்களாதேஷ் பிரஜைகள் கைது

(கொழும்பு)

விசா காலாவதியாகியான நிலையில் நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 34 பங்களாதேஷ் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சீதுவை பகுதியில் உள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்தபோது குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவால் இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைதான பங்களாதேஷ் பிரஜைகள் 19 முதல் 54 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுதுறை அதிகாரிகளுக்குக் கிடைத்த பல புலனாய்வு அறிக்கைகளின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பங்களாதேஷ் பிரஜைகள் வெலிசறை குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை அதிகாரிகள் அவர்களை விரைவில் பங்களாதேஷுக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (நி-8)




தென்மராட்சி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான மாதிரி கணித செயற்பாட்டறைத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. பாடசாலை முதல்வர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆங்கில, மற்றும் வெளிநாட்டு மொழிகள்,ஆரம்பக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப.சுதர்சன் கலந்து சிறப்பித்திருந்தார்.


## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1996-RC
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Project Engineer (Swiss)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15428

பிறப்பு: 1996-இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா-30 1/2
உயரம்: 5'10"
தகைமை/தொழில்-BSc,Software Engineer
எதிர்பார்ப்பு: BSc Graduates, அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15430

பிறப்பு: 1982-இந்து
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 5'8"
தகைமை/தொழில் - புடைவையகம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15431

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா-21
2இல் சூரி செவ்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: BSc, Senior Software Engineer (Singapore)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/15432

பிறப்பு: 1990- இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா-16
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc, Surveyor
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15433

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 2001-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா-4 3/4
தகைமை/தொழில்: BFA
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/15452

பிறப்பு: 1996-இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்: 5'1"
கி.பா-26
தகைமை/தொழில்: BST, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/15453

பிறப்பு: 1996-இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Degree, Teacher
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15454

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா- 43 3/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில் -Management, DO
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/15456

பிறப்பு: 1993-இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - Engineer Course (லண்டன்)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15457

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 370



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மருமகள்

இப்போது எல்லா ஊர்களிலும் மாமியார் மருமகள் ஒருத்தரை ஒருத்தர் நன்றாக புரிந்து கொண்டு நல்லவிதமாகதான் இருக்கின்றனர் பல இடத்திலே! அதனாலே நான் இப்பொழுது சொல்லப்போகின்ற கதையைக் கேளுங்கள் இந்த காலத்தில் அவ்வளவு மோசமாக யாரு சார் நடந்து கொள்கின்றனர். என கேட்டு யாரும் சண்டைக்கு வந்துவிடாதீர்கள். இன்னொரு உண்மையும் சொல்லுகின்றேன் என்னுடைய பாதுகாப்புக்காக. இந்த கதையை நமக்கு எழுதி அனுப்பியிருக்கின்றதே கொஞ்ச நாளில் மருமகளாகவும் அதன்பின் மாமியாராகவும் ஆகப்போகும் ஒரு நேயர் தான்.

சரி இப்பொழுது கதைக்கு வருவோம். ஒரு சின்ன குழப்பம் அந்த வீட்டிலிலே மாமியார் ஆட்சி. அவர் வைத்ததுதான் சட்டம். பிள்ளையாண்டான் எப்படி என்றால் அம்மா சொல்வதையும் கேட்பாள் மனைவி சொல்வதையும் கேட்பான். நமக்கு ஏன் பிரச்சினை என்கின்ற விதம்! மருமகளிடம் குறை கண்டுபிடிப்பதில் அந்த மாமியாருக்கு ஒரு சுவாரஸ்யம்! சின்ன சின்ன விடயத்தில் எல்லாம் குற்றம் கண்டுபிடித்து கொண்டு இருந்தார்.

பொதுவாக எல்லோரும் எப்படி என்றால் ஏதாவது ஒரு காரணத்துக்காகதான் சண்டை போட்டிருப்பார்கள். அந்த அம்மா எப்படி என்றால் ஏதாவது ஒரு சண்டை போடுவதற்க்கு காரணத்தை தேடி கொண்டு இருப்பார். அப்படி ஒரு மனசு அந்த மருமகப் பெண் பாவம் பயந்து ஒவ்வொரு காரியமும் செய்துகொண்டு வந்தாள்.

இப்படியே பல வருடம் ஓடிவிட்டது அந்த மாமியாருக்கும் ரொம்ப வயதாகிவிட்டது.இருந்தாலும் அந்த பழைய சுபாவம் மட்டும் மாறவில்லை! திடீரென ஒரு நாள் பக்கவாதம் வந்து அந்த அம்மாவிற்கு ஒரு பக்கம் கை காலை இழுத்துக்கொண்டது. வாய் சுத்தமாக பேச முடியாமலே போய்விட்டது. சத்தம் மட்டும் வரும்.ஒரு கை காலை அசைக்க முடியும். பேசுவதெல்லாம் சைகையால் மட்டும் தான்..

இப்படிப்பட்ட நிலைமையிலும் கூட அந்த பெண் தண்ணியோ பாலோ இவர்கள் வைத்தால் எதிரிலே கொண்டுவந்து வைத்தால் அதை வேண்டும் என்றே தட்டிவிட்டு வம்பு வளர்ப்பது.அதற்குப்பிறகு அந்த பெண் தரையை சுத்தப்படுத்தும் போது,அதைப்பார்த்து ரசிப்பது இருந்தாலும் அந்தப்பெண் இதையெல்லாம் பெரிதுப்படுத்தாமல் ரொம்பப் பொறுமையாகத்தான் இருந்தாள்.

ஒரு நாள் வீட்டிலே வைத்திருந்த பாலை பூனை குடித்துவிட்டு ஓடிவிட்டது.வயதான காலத்தில் இந்த அம்மா இல்லாமல் கஷ்டப்படுவார்கள் என நினைத்து பக்கத்து வீட்டிலே போய் கொஞ்சம் வாங்கிவிட்டு வந்து காய்ச்சி மாமியார் முன்னாடி கொண்டுவந்து வைத்தாள் அந்த பெண். வழக்கம் போல் அந்த அம்மா பாலை தட்டிவிட்டார்கள் இதை அந்த மருமகள் கவனித்துவிட்டாள்.

இவ்வளவு நாள் பொறுமையாக இருந்த அந்த மருமகளுக்கு இன்றைக்கு இதைப் பார்த்ததும் கோவம் வந்துவிட்டது. கதவிற்கு பக்கத்தில் சாத்தி வைத்திருந்த உலக்கையை எடுத்து மாமியார் தலையிலே போட அது தவறி கழுத்திலேயே பட அந்த அம்மா கழுத்தை பிடித்துக்கொண்டு ஆ. என்று கத்த இந்த பெண் ஒன்றும் அலட்டிக்கொள்ளாமல் உலக்கையை எடுத்து மறுபடியும் கதவுப்பக்கம் சாத்தி வைத்துவிட்டு நடந்து போய்விட்டாள்.

இருந்தாலும் மனதிற்குள் லேசாக ஒரு பயம்.கணவன் வீட்டிற்கு வந்ததும் என்ன விடயம் என்று கேட்டால் எப்படி சமாளிக்கலாம்? அன்றைக்கு என்று பார்த்து ரொம்ப நேரம் கழித்து வீடு வந்து சேர்ந்தான் கணவன், உடனே அந்த அம்மா புகார் பண்ண ஆரம்பித்தார்.பேச்சு வராதே! அதனால் ஒரு பக்கத்து கையாலே சைகை காட்டினார். கதவுக்கு பக்கமாக இருந்த பக்கமாக கையை நீட்டிக் காட்டி அப்படியே அந்த கையை தன் கழுத்திற்கு பின்பக்கமாக சுத்தி காட்டி நாக்கை வெளியே காட்டினார்.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை! என்ன சொல்கின்றார்கள் அம்மா என்று மனைவியிடம் கேட்டான் அதற்கு அந்த மருமகள் ரொம்ப புத்திசாலித்தனமாக என்னங்க உங்கள் அம்மா உங்களைப் பார்த்து ஏன் உலக்கை மாதிரி நிற்கின்றாய்,சாகப்போகும் எனக்கு சங்கிலி எதற்கு? என் கழுத்தில் கிடக்கும் சங்கிலியை கழற்றி என் மருமகள் கழுத்தில் போடு என்று சொல்கிறார்கள் அப்படி என்றாள்.

ஓ அப்படியா விஷயம் என்று சொல்லி அம்மா கழுத்தில் இருந்த சங்கிலியை எடுத்து மனைவி கழுத்தில் போட்டுவிட்டு அம்மா உங்கள் விருப்பப்படியே போட்டு விட்டேன் இனிமேலாவது நிம்மதியாக படுத்துத் தூங்குங்கள் என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றான்.

பார்த்தீர்களா கதையை அதனால் மாமியார்களே சைகை காட்டுவது என்றால் கூட இனிமேல் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்!

# வடக்கில் சுற்றுலாத் துறையை

## வினைத்திறனாக்க நடவடிக்கை எடுங்கள்

### ரவிகரன் எம்.பி வலியுறுத்து

(வவுனியா)

வடமாகாணத்தில் சுற்றுலாத்துறையை வினைத்திறனாக இயங்கச்செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சுற்றுலாத்துறை அமைச்சரின் கவனத்திற்கு, தற்போது சுற்றுலாத் துறை மூலம் கிடைக்கும் வருமானத்திலேயும் இலங்கை முழுவதும் தங்கியுள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டுக்கு வருகை தருகின்றனர். குறிப்பாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்திற்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் பலாலி சர்வதேச விமான நிலையம் மற்றும், நாகப்பட்டினம் படகு சேவையினூடாக வருகை தருகின்றனர்.

சுற்றுலா சார்பான விடயங்கள் முனைப்புப் பெற்றிருக்கும் நிலையில் இவை சார்பாக அபிவிருத்தி செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கும் ஒழுங்கு படுத்துவதற்கும் நிர்வாக ரீதியாக மாவட்டச் செயலகங்களில் பிரத்தியேகமாக சுற்றுலா அலுவலகங்கள் இல்லை. மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் சுற்றுலா அபிவிருத்திக்கான உத்தியோகத்தர்கள் இல்லை.

சுற்றுலாசார் அபிவிருத்தி செயற்பாடுகள், அலுவலகர்களால் மேலதிக நிர்வாகக் கடமையாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

இதே நிலைமை மாகாண சபைகளில் குறிப்பாக உள்ளூராட்சி சபைகளிலும் காணப்படுகின்றன.

சுற்றுலாத்துறைக்கு பலமான நிர்வாக அலுவலகமும் ஆளணியும் தேவை. எனவே இதற்கென புதிய அலுவலர்கள் உள்வாங்கப்பட வேண்டும். அவ்வாறு உள்வாங்கப்படும் புதிய அலுவலர்களின் திறமைகளையும், ஆற்றல்களையும் பயன்படுத்தக்கூடிய வகையில் எமது மாகாணத்திலுள்ள மாவட்டச் செயலகங்களில் சுற்றுலா அலகுகளை உடனடியாக நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன் மூலம் வடக்கு மாகாணத்தில் வினைத்திறனான முறையில் சுற்றுலாத்துறையை செயற்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி-8-250)

# உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை

### கஜேந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

(வவுனியா)

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசியப் பேரவை உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சார்ந்த அதன் தலைவர் சித்தார்த்தன் மற்றும் அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அதன் பங்காளிக் கட்சியின் தலைவர் சுரேஸ் பிறேமச் சந்திரன் ஆகியோருடன் மேற்படி விடயம் தொடர்பில் உரையாடியுள்ளோம். அவர்களிடமிருந்து சாதகமான பதில் கிடைத்தால் இணைந்து ஆட்சியமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.



அத்துடன், வவுனியா வடக்கு நெடுங்கேணியில் சிங்கள பௌத்த இனவாத தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றுவதனைத் தடுக்கும் வகையில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார். (நி-8-250)



# சோழியபுரம் பத்ம வெளியீடு

## நல்லை ஆதீனமும் அதன் வளர்ச்சியும்

என் அன்பு உள்ளங்களே!

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லை நகரிலே கோயில் கொண்டு எழுந்தருளி அருளாட்சி செய்கின்ற கந்தவேள் பெருமானுக்கும் நல்லை சிவபெருமானுக்கும் இடையே ஆன்மீகச்சிகரமாக அமைந்து காணப்படுவது நல்லை ஆதீனமாகும் இந்த ஆன்மீக சிகரத்தை இந்தியா-மதுரை ஆதீன அனுசரணையுடன் 1966 ஆம் ஆண்டு மணிஐயர் அவர்களே உருவாக்கினார்கள். அத்தோடு முதலாவது நல்லை ஆதீன முதல்வராகவும் அவர்களே விளங்கினார்கள். நல்லை ஆதீனம் தொடக்க நிலையிலே சைவமும் தமிழும் மெல்ல மெல்ல மறுமலர்ச்சி அடைய ஆரம்பித்தது. மணிஐயர் அவர்களின் காலத்திலே நல்லை ஆதீனம் ஒரு அறநெறிப் பாடசாலை போன்றே காணப்பட்டது. அவர்களின் ஆன்மீகப் பணிகளுடன் வழிகாட்டலுடனுமே யாவும் நடைபெற்றது. மாணவர்களுக்கு அறநெறிக் கல்வியுடன் தமிழ் வகுப்புகள், பண்ணிசை வகுப்புக்கள், சங்கீத வகுப்புக்கள் சமய வகுப்புக்கள் யாவும் நடைபெற்றதுடன் மதியம் அன்னதானமும் வழங்கப்பட்டது. வசதி குறைந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கினார்கள். ஒருமுறை அந்தண மாணவர்களின் "சிவானந்த குருகுலம்" இடமில்லாத காரணத்தால் நடத்த முடியாமல் அவதியுற்றனர். அப்போது ஆதீன முதல்வர் முதலாவது சன்னிதானம் குருகுல அதிபரான சமஸ்கிருத பண்டிதர் மட்டுவில் சதாசிவ சர்மா உபாத்தியாரை அழைத்து நல்லை ஆதீனத்தில் சிறிது காலம் வகுப்புகளை நடாத்த அனுமதி வழங்கினார். இது காரணமாக அடியேனும் நல்லை ஆதீனத்தில் 1975 ஆம் ஆண்டளவில் சிறிது காலம் கல்வி பயிலும் பாக்கியத்தைப் பெற்றேன். அப்போது அந்தண மாணவர்கள் தண்ணீர் குடிப்பதற்காக முதலாவது குருமகா சன்னிதானம் ஒரு மண்பானையில் நிறைய தண்ணீர் ஊற்றி அதன் உள்ளே அடிப்பாகத்திலே மூழிவேர்கள் நிறைய வைத்துவிடுவார். அது ஒரு வகை கசாயத்தண்ணீராகவே காணப்பட்டது.

தண்ணீரல்ல அமிர்தம் இன்னும் சொல்லப்போனால் ஆன்மீக அமிர்தம் என்றே கூறலாம். அவ்வளவு சிறப்பான பானம். அடியேன் இதை அடிக்கடி பருகிக்கொள்வேன். இதை என்னால் மறக்கவே முடியாது. இன்னும் நாயன்மார்களின் குருபூசை தினங்களில் விசேட பூசைகள் செய்து வழிபடுவார்கள். நல்லை நகர் நாவலர் காலத்து பிற்பாடு நல்லை நகரிலே ஆதீன முதல்வர் மணி ஐயரின் கதா பிரசங்கம் முக்கிய இடத்தைப் பிடித்தது. நல்லூர் முருகன் உற்சவக் காலம் 25 நாட்களும் நாட்டின் நாலாப் பக்கங்களிலும் இருந்து அடியார்கள் மணி ஐயரின் கதா பிரசங்கத்தைக் கேட்க வந்து குவிந்து விடுவார்கள். என்ன ஆச்சரியம் அவரது இனிமையான கனீர் எனும் குரல் அடுக்குத் தமிழ் ஆளுமை கொண்ட தோற்றம் யாவும் அவருக்கு வாய்த்தவையே. உற்சவ காலங்களில் மணி ஐயரை நல்லை வீதியிலே காணலாம். ஐயர் அவர்களின் பண்ணிசையுடன் கூடிய திருமுறை பஜனைகள், கதாபிரசங்கங்கள், சமய சொற்பொழிவுகள் யாவும் அனைத்து அடியார்களின் மனதைக் கொள்ளை கொண்டு போய்விடும் எனலாம். யாவும் அவ்வளவு சிறப்பாக இருக்கும். இவ்விதமாக நல்லை ஆதீனத்தின் ஊடாக சமய சமூக மறுமலர்ச்சி ஏற்பட்டதை யாரும் மறந்து விட முடியாது. நல்லை ஆதீனத்தின் சேவைகள் அளப்பரியது என்றே கூற வேண்டும்.

நல்லை ஆதீனம் முதலாவது குரு மகா சன்னிதானம் சிவமுத்தியடைந்த பின்னரே அவரது சீடனாக ஆதீன ஒழுக்கநெறியைக் கடைப்பிடித்து வாழ்ந்த இரண்டாவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்தர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆதீன முதல்வராக பீடாரோகணம் செய்யப்பட்டார்.

சுவாமிகள் தோற்றம் நடைஉடை பாவனை பேச்சு குணாம்சங்கள் யாவுமே அவரை ஓர் ஆன்மீகத் தலைவர் என்பதை அனைத்து மக்ளும் புரிந்து கொண்டனர். சுவாமிகள் ஆன்மீக வழியில் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக நாட்டிற்கும் சைவ சமய மக்களுக்கும் அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளார். ஆதீன முதலாவது குருமகா சன்னிதானத்தின் அடியினையே பின்பற்றி தனது ஆன்மீகப் பணியை ஆரம்பித்தார். அதாவது நல்லையம்பதியில் திருமுறை ஓதல், சமய சொற்பொழிவுகளை நிகழ்த்துதல், சமய நிகழ்வுகளில் கலந்து கொள்ளல், பொது நிகழ்வுகளிலும் தவறாது கலந்து கொள்ளல், கோயில் கும்பாபிஷேக வைபவங்களில் கலந்து ஆசியுரை வழங்கல் போன்ற அனைத்து விடயங்களிலும் நல்லை ஆதீன முதல்வரின் வகிபாகங்கள் நிறையவே காணப்பட்டன. சுருங்கச் சொன்னால் சுவாமிகளின் ஆசி இல்லாமல் எந்தவொரு விழாவும் நடைபெறாது என்றே கூறலாம்.

இன்னும் நல்லை ஆதீன முதல்வரைப் பற்றி கூறுவதானால் யாவருடனும் அன்பாகப் பழகும் அன்புள்ளம் கொண்டவர். கருணையுள்ளம் பண்புள்ளம் படைத்தவர். இன்சொல் பேசுபவர். இனிய வார்த்தைகளைக் கூறி மக்களை மகிழ்விப்பவர். யாவரையும் தனது பேச்சாற்றல் மூலம் கவர்ந்து விடுவார். காலநேரமறிந்து தனது கடமையை முடித்துக்கொள்வது அவரது சிறப்பம்சம் ஆகும்.

இவரது காலத்திலே தான் நல்லை ஆதீன மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு சமய சமூக நிறுவனமாக வளர்ச்சியடைந்தது எனலாம். சுவாமிகளின் அயராது முயற்சியும் அளப்பரிய சேவையுமே ஆதீனத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டது. அத்துடன் இந்தியா ஆதீன மடாலயங்களில் தொடர்புகள் சர்வதேச தொடர்புகளையும் பேணிக்காத்தவர். சமத்துவத்தைக் கடைப்பிடித்த பெருமகனார். யுத்த காலத்தில் அனைத்து மக்களும் நிலை குழம்பி தடுமாறிக் கொண்டிருந்த போது சுவாமிகள் ஆற்றிய பணிகளும் நினைவுகூறத்தக்கவையே. அதுமட்டுமன்றி சமயத் தலைவராக இருந்து கொண்டு எமது அனைத்து தமிழ் மக்களின் உண்மை நிலையை சிங்கள அரசியல் தலைவர்களுக்கும் வெளிநாட்டு இராஜதந்திர பிரமுகர்களுக்கும் எடுத்துக் கூறியவர்.

இவ்வாறாக தனது வாழ்நாளை சைவ சமயத்திற்காக அர்ப்பணித்து நல்லை ஆதீனத்தின் மூலமாக நாட்டின் அனைத்து மக்களையும் அரவணைத்து இந்து சமய போதனைகள் மூலம் குறிப்பாக சிறுவர்கள் இளைஞர்களிடையே ஆன்மீகத்தை பரப்பி ஒரு ஞானியாக ஒரு வழிகாட்டியாக ஒரு ஆன்மீகத் தலைவராக திகழ்ந்தவர் இன்று எம்மை விட்டு பிரிந்தது மட்டுமன்றி நிரப்பமுடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்திச் சென்றுள்ளார். இந்த மகா புருசர் எம் மக்களால் என்றும் நினைவு கூரப்படுவார் என்பது உறுதி

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சோழியபுரம்,
சுழிபுரம்.
10.05.2025

சோழியூரான் பிறைசூடிக்குரு
(ஆன்மீகவாதியும் ஓய்வுநிலை ஆசிரியரும்)

(4069)

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர்

768





அடுத்த கணத்தில் யானை யானையாகவும், சுவர் சுவராகவும் நின்றது. துவாரத்தையும் காணோம், பெண்ணையும் காணோம். சில் வண்டுகள் ரீங்காரம் போல் காதைத் துளைத்த 'கூ' என்ற அந்தப் பெண்ணின் குரலும் கேட்கவில்லை.

வந்தியத்தேவனுடைய நெஞ்சு படபடப்பு அடங்கச் சிறிது நேரம் ஆயிற்று. தான் கண்ட தோற்றத்தைப் பற்றி அவன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

## ஆறாம் அத்தியாயம்
## மணிமேகலை

சம்புவரையரின் செல்வப் புதல்வியான மணிமேகலை குதூகலம் நிறைந்த பெண். தந்தையும் தாயும் தமையன் கந்தமாறனும் அவளைக் குழந்தைப் பிராயம் முதல் அன்பும் ஆதரவுமாய்ப் பேணி வளர்த்து வந்தார்கள். சம்புவரையரின் அரண்மனையில் அவள் கொடுங்கோல் அரசியாக விளங்கி வந்தாள். அவள் இட்டதே மாளிகைக்குள் சட்டமாக நடந்து வந்தது. சில காலத்துக்கு முன்பு வரையில் மணிமேகலையின் வாழ்கை ஆட்டமும் பாட்டமும் களியாட்டமுமாகக் கழிந்து வந்தது. நாலைந்து மாதத்துக்கு முன்னால் அவளுடைய வாழ்க்கையில் முதன் முதலாக ஒரு தடங்கல் ஏற்பட்டது. அவளது விருப்பத்துக்கு விரோதமான காரியத்தை அவள் செய்ய வேண்டும் என்று வீட்டுப் பெரியவர்கள் பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தார்கள். 'பிடிவாதம் உதவாது' என்ற பாடத்தை வீட்டுப் பெரியவர்களுக்கு மணிமேகலை எவ்வளவு தான் உபதேசித்தும் பயன் தராது போலிருந்தது.

இரண்டு மூன்று வருஷமாகக் கந்தமாறன் போர்க்களங்களிலிருந்து திரும்பி வீட்டுக்கு வரும்போதெல்லாம் அவனுடைய சிநேகிதன் வல்லவரையனைப் பற்றி அவளிடம் கூறுவான். அவனுடைய வீர தீர சாமர்த்தியங்களைப் பற்றியும், புத்தி சாதுர்யத்தைப் பற்றியும் வானளாவப் புகழ்வான். அழகில் மன்மதன் என்றும், வீரத்தில் அர்ச்சுனன் என்றும், யுக்தியில் கிருஷ்ணபகவான் என்றும் வியந்து வர்ணிப்பான். "அவன் தான் உனக்குச் சரியான கணவன். துஷ்டத்தனத்தை அடக்கி உன்னைக் கட்டுக்குள் வைத்திருக்கக் கூடியவன்" என்பான். இதையெல்லாம் அடிக்கடி கேட்க வேண்டுமென்று மணிமேகலைக்கு ஆசையாயிருக்கும். அதே சமயத்தில் வெளிப்படையாகக் கந்தமாறன் மீது அவள் எரிந்து விழுவாள் அவனுடன் சண்டை பிடிப்பாள்.

"இப்படி வெறுமனே சொல்லிக் கொண்டேயிருக்கிறாயே? ஒருநாள் அழைத்துக் கொண்டு தான் வாயேன்! அவன் சாமர்த்தியத்தைப் பார்த்துவிடுகிறேன்" என்பாள்.

"ஆகட்டும் ஆகட்டும்!" என்று கந்தமாறன் கறுவிக் கொண்டிருப்பான்.

மணிமேகலையும் ஒருவாறு வல்லவரையன் வந்தியத்தேவனைக் கற்பனைக் கண்ணால் கண்டு, மானஸ உலகில் அவனோடு பேசிப் பழகி, சிரித்து விளையாடி, சண்டை போட்டுச் சமாதானம் செய்து, இப்படியெல்லாம் பகற்கனவு காண்பதில் காலம் போக்கி வந்தாள். அவளுடைய அந்தரங்கத் தோழிகளிடம் சில சமயம் தன் தமையனுடைய சிநேகிதனான வாணர் குல வீரனைப் பற்றிப் பேசி மகிழ்ந்தும் வந்தாள். இத்தகைய இனிய பகற்கனவுகளுக்கு நாலு மாதங்களுக்கு முன்னால் எதிர்பாராத ஓர் இடையூறு நேர்ந்தது. கந்தமாறன் வேறு ஸ்வரத்தில் பேச ஆரம்பித்தான். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தவளைக் குட்டிச்சீடன்



(நேற்றைய தொடர்ச்சி)

அதனால், மறு படியும் இதே தவளைகும் ஓணானுக்கும் உயிர் கொடுங்கள். இல்லா விட்டால் தினம் நூறு பொற்காசுகளை நீங்கள் தான் தர வேண்டும், என்றார் பரமார்த்தர்.

வேறு வழி தெரியாத மன்னன், மறுபடியும் உயிர் கொடுக்க முடியாது. அதனால் தினம் நூறு பொற்காசு தந்து விடுகிறேன். என்று ஒப்புக் கொண்டான். மடத்துக்கு வந்ததும், செத்துப் போன தவளையையும் ஓணானையும் காட்டி ராஜாவையே ஏமாற்றி விட்டோம்! இனிமேல் தினமும் நூறு பொற்காசு கிடைக்கப் போகிறது. என்று குதித்தார்கள்.

முட்டாளையும் மூடனையும் பார்த்து, நீங்கள் இரண்டு பேரும் செத்து விட்டதாகக் கூறி விட்டோம்.

ஆகையால் இனி மேல் மடத்தை விட்டு வெளியே போகவே கூடாது தப்பித் தவறி வெளியே போனீர்களானால் மாட்டிக் கொள்வோம். ஜாக்கிரதை என்று எச்சரிக்கை செய்தார் குரு.

ஒரு வாரம் கழிந்தது இரவு நேரத்தில் எல்லோரும் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டு இருந்தனர்.

முட்டாளும் மூடனும் மட்டும் விழித்துக் கொண்டனர். ஊர் சுற்றி ஒரு வாரம் ஆகிறது! யாருக்கும் தெரியாமல் ஒரு சுற்றுச் சுற்றிக் கொண்டு வந்து விடலாம்! என்று ஆசைப் பட்டனர்.

கையில் கொள்ளிக் கட்டையுடன் இருவரும் வெளியே புறப் பட்டனர். இரண்டு தெரு சுற்றுவதற்குள், இரவுக் காவலர்கள் கண்ணில் பட்டு விட்டனர்!

உடனே இருவரையும் துரத்திப் பிடித்தனர். பொழுது விடிந்ததும், மற்ற சீடர்களும் குருவும் கைது செய்யப்பட்டனர். ஆளை உயிரோடு வைத்துக் கொண்டே செத்து விட்டதாக ஏமாற்றினீர்கள். அதனால், இப்போது உண்மையாகவே இவர்கள் இருவரையும் தேர் ஏற்றிச் சாகடிக்கப் போகின்றேன்! என்றான் மன்னன்.

அதைக் கேட்ட குருவும் சீடர்களும், அலறினார்கள். ஐயோ, மன்னா! தெரியாமல் செய்து விட்டோம் உங்களிடம் இருந்து வாங்கிய பணத்தை எல்லாம் திருப்பிக் கொடுத்து விடுகிறோம். மன்னித்து விட்டு விடுங்கள், என்று அரசனின் கால்களில் விழுந்தார் குரு. சீடர்களும் கீழே விழுந்து வேண்டினார்கள்.

மன்னனும் போனால் போகிறது என்று மன்னித்து அனைவரையும் விடுதலை செய்தான்.

(முற்றும்.)

இரும்பைப் பூவாகவும் பாறையைப் பஞ்சாகவும் மாற்றும் வலிமை மகிழ்ச்சிக்கு உண்டு. ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் வெற்றிக்கு யாரும் உரிமை கோராதீர்கள்

தமிழர் தாயகத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கிடைத்த வெற்றி தமிழ் மக்களின் வெற்றி என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தயவு செய்து உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வெற்றிக்கு யாரும் உரிமை கோரி விடாதீர்கள்.

தேர்தல் வெற்றி மட்டும் அல்ல. பொதுவில் எந்தக் காரியத்தில் வெற்றி அடைந்தாலும் அதனை மக்களின் வெற்றியாக நினைக்க வேண்டும்.

அப்போதுதான் அந்த வெற்றி நிலைக்கும்.

இதனையே ஜேம்ஸ் யென் என்ற அறிஞர் "..... இதை நாமல்லவோ செய்தோம் என்று மக்கள் கூறும் வகையில் எங்களின் செயற்திட்டங்கள் அமைய வேண்டும்" என்கிறார்.

ஆக, நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் தங்களின் பணியை இன உணர்வோடு செய்து முடித்துள்ளனர். இந்த உண்மையை தமிழ் அரசியல் தரப்புகள் உரக்கக் கூற வேண்டும். இதை விடுத்து இது எங்களுக்குக் கிடைத்த வெற்றி. ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கத்தின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கையை இழந்துள்ளனர் என்றெல்லாம் அறிக்கை விடுவது மிகப் பெரும் அபத்தம்.

ஆக, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழர் தாயகத்தில் கிடைத்த பெறுபேறுகள் தமிழ்மக்கள் வழங்கிய அழகான தீர்ப்பு என்று கருதுவதே ஏற்புடையது.

இது ஒரு புறம் இருக்க, இப்போது தமிழர் தாயகத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கு ஆட்சி அமைப்பதில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலை தமிழ் மக்களால் காரண காரியத்தோடு ஏற்படுத்தப்பட்டது.

அதாவது, தமிழ்த் தரப்புகள் ஒற்றுமைப்படாமல் உள்ளூராட்சி சபைக்கான ஆளுகையைத் தீர்மானிக்க முடியாது.

தேர்தல் முடிவுகளின் பிரகாரம் முதல் நிலையில் இருக்கக்கூடிய கட்சி ஆட்சி அமைக்குமாயின், எதிர்க்கட்சிகளின் பலம் ஆளுங் கட்சியை விட அதிகமாகிவிடும்.

இந்நிலையில் ஆட்சிப் பலத்தை நிரூபிக்கின்ற வாக்கெடுப்பிலேயே தோற்றுப் போகின்ற சூழ்நிலை ஏற்படும்.

இவ்வாறான நிலைமையை தமிழ் மக்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

எனவே மனக்குரோதங்களை மறந்து தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றிணைய வேண்டியது கட்டாயமானது.

அதிலும் இவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்காக ஒற்றுமைப்படுதல் என்ற எல்லை கடந்து, தமிழ்த் தேசியத்தை ஏற்றுக் கொள்கின்ற அத்தனை தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றுபட வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

ஆம், நான் பெரிது எனது கட்சி பெரிது என்ற அகங்காரங்களைத் துறந்து, கிடைத்த சந்தர்ப்பத்தைத் தக்க முறையில் பயன்படுத்தி எம் தமிழினத்தின் விடிவுக்காக தமிழ்த் தரப்புகள் ஒன்றுபட வேண்டும். இதுவே தமிழ் மக்களின் வேணவா.

### பாலியல் இலஞ்சம் கோரியவருக்கு

# 20 ஆண்டு கடூழியச்சிறை, வாக்குரிமை உள்ளிட்ட சிவில் உரிமைகளும் பறிப்பு

### கொழும்பு மேல் நீதிமன்றம் அதிரடி

தனது மகனின் அறுவை சிகிச்சைக்குத் தேவையான பணத்தினை விடுவிக்கக் கோரிய தாயாரிடம் பாலியல் இலஞ்சம் கோரிய சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு பத்து ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 20 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் பிரதிவாதியின் வாக்குரிமை உள்ளிட்ட சகல சிவில் உரிமைகளும் இரத்துச் செய்யப்படுவதாகவும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு அறிவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தனது ஏழு வயது மகனின் சிறுநீரக அறுவை சிகிச்சைக்காக அரசாங்கத்தின் நிதியுதவியைப் பெற்றுக் கொள்ளத் தேவையான அனுமதியை வழங்கக் கோரிய மூன்று பிள்ளைகளின் தாயாரிடம் திவி நெகும சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பாலியல் இலஞ்சம் கோரியமை தொடர்பிலான வழக்கிலேயே கொழும்பு மேல் நீதிமன்று குறித்த அதிரடித் தீர்ப்பை வழங்கியுள்ளது.

(ம-4,7)

# மாணவி விவகாரத்தில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்

### பிரதமர் ஹரிணி உறுதி

பாலியல் தொந்தரவுக்குள்ளான நிலையில் மனவுளைச்சல் காரணமாக உயிரிழந்த மாணவி விவகாரத்தில் பக்கச் சார்பற்ற முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனப் பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது கொழும்பு பாடசாலையின் மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்டமை மற்றும் நீதி கோரி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆற்றிய விசேட உரையை தொடர்ந்து பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கொழும்பு பாடசாலை மாணவி தற்கொலை செய்து கொண்டமை கவலைக்குரியது. இது உணர்வுபூர்வமான தொரு விடயம். இவ்வாறான சம்பவங்கள் எவருக்கும் குறிப்பாக பெற்றோருக்கு தாங்கிக் கொள்ள முடியாது. ஆகவே இவ்விடயம் குறித்து பேசுவதிலும் தலையிடுவதிலும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

இந்த விடயத்தை அரசியல் ரீதியானதாக கருதக் கூடாது. 15 வயது மாணவி பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை கருத்திற்கொள்ள வேண்டும்.

ஆகவே சமூகம் என்ற அடிப்படையில் அனைவரும் தோல்வியடைந்துள்ளோம். இதற்கு அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும். இவ்வாறான சம்வங்கள் இனியும் தோற்றம் பெறாத அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த மாணவியின் விவகாரத்தில் முதல் சம்பவம் இடம்பெற்ற போது அது முறையாக ஆராயப்படவில்லை. இந்த விடயம் குறித்து ஏன் கல்வி அமைச்சுக்கு அறிவிக்கவில்லை? குறித்த ஆசிரியர் தொடர்பில் ஏன் அமைச்சுக்கு அறிவிக்கவில்லை என்பது தொடர்பில் அந்த பாடசாலையின் அதிபரிடம் விளக்கம் கோர அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சருடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடினேன். கல்வி அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பொலிஸ் திணைக்களம் ஒன்றிணைந்து ஒரு தொடர்பாடல் நிலையில் செயற்படுவதற்கான பொறிமுறை ஒன்றை வகுப்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

தற்கொலை செய்து கொண்ட மாணவியின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இச்சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளிக்கின்றேன் என்றார். (ம-4,7)

# தேர்தல் செலவினத்துக்கான அறிக்கைகளை சமர்ப்பிக்குக

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு அமைவான தேர்தல் பிரசார வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் 03 ஆம் எண் தேர்தல் செலவின ஒழுங்கு முறைச் சட்டத்தின்படி வேட்பாளர்கள் தேர்தல் பிரசார வருமானம் மற்றும் செலவினங்கள் குறித்த தனித்தனி அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி போட்டியிட்ட மாவட்டங்களில் உள்ள தெரிவத்தாட்சி அதிகாரியிடம் இந்த வருமானம் மற்றும் செலவின அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக் குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்களுக்கு எதிரான சட்டத்தை அமுல்படுத்துவதில் சிக்கல் இருப்பதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (ம-4,7)

# இந்திய - பாக் மோதலில் இலங்கை தலையிடாது

### அரசாங்கம் திட்டவட்டம்

(கொழும்பு)

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான யுத்தத்தில் இலங்கை தொடர்ந்தும் நடுநிலை காக்கவும் அணி சேராக் கொள்கையைக் கடைப்பிடிக்கவும் தீர்மானித்துள்ளதாக அரசாங்கம் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

இது குறித்து அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

பதற்றங்களைத் தணிப்பது, பிராந்திய அமைதியைப் பாதுகாப்பது மற்றும் பயங்கரவாதத்தைத் தடுப்பதே எமது ஈடுபாட்டின் நோக்கமாக அமைந்துள்ளது. எந்த வடிவிலான பயங்கரவாதத்தையும் நாம் அங்கீகரிக்கவோ ஆதரிக்கவோ போவதில்லை. மேலும் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் ஆதரிக்க நாம் தயாராக உள்ளோம்.

இந்த நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம். கடந்த காலங்களில் இதைத் தெளிவாகத் தெரிவித்துள்ளோம். ஆயினும் இலங்கை அணிசேரா நிலைப்பாட்டை கடைபிடிப்பதுடன் இந்தியப் பெருங் கடல் புவிசார் அரசியல் மோதல்களில் நாடு பங்கேற்காது.

நாம் இந்தியப் பெருங் கடல் புவிசார் அரசியல் பிரச்சினைகளில் ஈடுபட மாட்டோம், எமது இறையாண்மையைக் காத்துக் கொண்டு அணிசேரா நிலைப்பாட்டைப் பின்பற்றுவோம் என்றார். (ம-4,7)

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 26.04.2025-12.11.2026 வரை

## ராகு வரும் இடம் விரயம்! வாங்கிய சொத்துக்களோ கிரயம்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்






இதுவரை உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த ராகு பகவான் 26.4.2025 அன்று உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதே நேரத்தில் 6ஆம் இடத்திற்கு கேது வரப்போகிறார். சுமார் 1 1/2 ஆண்டு காலம் அதே இடத்தில் ராகுவும் கேதுவும் சஞ்சரித்துப் பாத சாரங்களில் பவனி வருவதற்கேற்ப பலன்களை வழங்குவார்கள். உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்திற்கு ராகு வருவதால் வீண் விரயங்கள் அதிகரிக்கும் என்பது பொதுவான நியதி. ஏழரைச் சனி நடைபெறுவதால், வீண் விரயங்களில் இருந்து விடுபட சுப விரயங்களை மேற்கொள்வது நல்லது. அடிக்கடி பயணங்கள் ஏற்படும். உத்தியோக மாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம் நிகழும். கடன் சுமை அதிகரிக்கலாம். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படும்.

6ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் உத்தியோகம், தொழிலில் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. உடல் நலனில் பிரச்சினை அதிகரிக்கும். மூடிக் கிடந்த தொழில் நிலையத்தை திறப்பு விழா நடத்திப் பார்க்க, எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும் எதிலும் அவசரமாக முடிவெடுக்க வேண்டாம். அலுவலக பணியில் ஆர்வம் இருந்தாலும் அதிகாரிகளின் கெடுபிடியால் மன வருத்தம் ஏற்படும்.

**குரு சாரத்தில் ராகு சஞ்சாரம் (26.4.2025 முதல் 31.10.2025 வரை)**

பூரட்டாதி நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். எதிர்பார்த்த பண வரவு கைக்கு வந்து சேரும். குடும்ப முன்னேற்றம் கூடும். தொழிலில் புதிய தொழில் நுட்பத்தை புகுத்தி வெற்றி காண்பீர்கள். கூட்டுத் தொழிலில் மாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் மேல் அதிகாரிகள் உங்கள் கருத்துகளுக்கு செவி சாய்ப்பர். அரசு வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அது கிடைக்கப்பெறும். ஒரு சிலர் உத்தியோகத்தில் இருந்து ஓய்வுபெற்று, சுய தொழில் தொடங்க முன் வருவர்.

**சுய சாரத்தில் ராகு சஞ்சாரம் (1.11.2025 முதல் 9.7.2026 வரை)**

சதய நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, மிக மிக கவனமாக இருக்க வேண்டும். கீழே விழுதல், காயம்படுதல் போன்றவை ஏற்படலாம். மருத்துவச் செலவுண்டு. மனக் கலக்கம் தரும் செய்திகள் வந்து கொண்டே இருக்கும். பிள்ளைகளாலும், பிறராலும் பிரச்சினை என்ற நிலை உருவாகும். கொடுக்கல் வாங்கல் திருப்தி தராது. எதிர்பார்த்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக இருக்கும். இது போன்ற நேரங்களில் சர்ப்பக் கிரகங்களுக்குரிய தலங்களுக்கு சென்று வழிபட்டு வாருங்கள்.

**செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சாரம் (10.7.2026 முதல் 12.11.2026 வரை)**

அவிட்ட நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, பணப்புழக்கம் நன்றாக இருக்கும். அதிக முயற்சி செய்தும் இதுவரை முடிவடையாத காரியம், இப்பொழுது முடிவடையும். எதிரிகள் விலகுவர். இடம், பூமி சம்பந்தப்பட்ட வகையில் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வியாபாரத் தலத்தை விரிவாக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். கடன் சுமை குறையும், திருமணம் திடீரென முடிவாகும்.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம் (26.4.2025 முதல் 27.6.2025 வரை)**

உத்தரம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, மிகுந்த கவனத்தோடு செயற்பட வேண்டும். தடை, தாமதம் வந்துசேரும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. அதிக பணிச் சுமையால் கோபம் அதிகரிக்கும். எதிர்மறை சிந்தனை தோன்றும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரியின் கெடுபிடி அதி கரிக்கும். குடும்ப உறுப்பினர், அக்கம் பக்கத்தினரால் பிரச்சினை வரலாம். கடன் சுமை அதிகரிக்கும்.

**சுக்கிர சாரத் தில் கேது சஞ்சாரம் (28.6. 2025 முதல் 5.3.2026 வரை)**

பூரம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, விரயங்களை சந்திக்க நேரிடும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை ஏற்படும். அதிக கடன் சுமையால், விரக்தி மேலோங்கும். ஒரு சில வேலைகளை உடனடியாக செய்யாமல் தள்ளி வைப்பீர்கள். தொழில் மந்தமாக நடைபெறும், வரவைக் காட்டிலும் செலவு கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. வீடு மாற்றம் முதல் நாடு மாற்றம் வரை, என்ன செய்யலாம் என்று யோசிப்பீர்கள்.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம் (6.3.2026 முதல் 12.11.2026 வரை)**

மகம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, தொழில் தொடர்பாக எடுத்த புது முயற்சிகள் வெற்றி தரும். வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் செலவு கூடும். சுய தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களை விலக்கி விட்டு, புதியவர்களைச் சேர்த்துக் கொள்ள முடிவெடுப்பர். உங்களுக்கு இடையூறு செய்த மேலதிகாரிகள் மாற்றப்படுவர். சிந்தனையில் தெளிவும், சிறப்பாக பணிபுரிய வேண்டும் என்ற துணிவும் பிறக்கும். எதிர்காலம் பற்றிய பயம் அகலும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

6.3.2026 அன்று சனி பகவான், மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். உங்களுக்கு ஜென்ம சனியின் ஆதிக்கம் நடைபெற உள்ளது. எனவே மனக் கவலை, இனத்தார் பகை அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லை உண்டு. கனத்த இதயத்தோடு காட்சி அளிப்பீர்கள். விரயங்கள் கூடும். உடல் ஆரோக்கிய சீர் கேடுகள் அதிகரிக்கும். ரண சிகிச்சைகளும், ஓய்வு எடுக்கும் சூழ்நிலைகளும் கூட, ஒரு சிலருக்கு உருவாகும். பணிபுரியும் இடத்தில் பிரச்சினை அதிகரிக்கும். உடன் பணிபுரிபவர்களால் உபத்திரவங்கள் கூடும். மனக் குழப்பம் அதிகரிக்கும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு - கேது பெயர்ச்சிக் காலத்தில் குருப்பெயர்ச்சி நிகழ்கிறது. 11.5.2025 அன்று குரு பகவான், மிதுன ராசிக்கு பெயர்ச்சியாகிறார். 4ஆம் இடத்தில் அர்த்தாஷ்டம குருவாக இருப்பதால், ஆரோக்கிய தொல்லை அதிகரிக்கும். குடும்பச்சுமை கூடும். பெற்றோரின் உடல் நலனில் கவனம் தேவை. உடன் பிறப்புகளால் அமைதி குறையும். பணிபுரியும் இடத்தில் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. ஒக்டோபர் 8ஆம் திகதி குரு பகவான், அதிசாரமாக கடக ராசிக்குப் பெயர்ச்சி யாகிறார். அப்போது குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. உச்சம் பெற்ற குருவின் பார்வையால் உன்னத நிலை வரும். வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். வரன்கள் முடிவாகும்.

(முற்றும்)

## ஐ.பி.எல்...

களுக்கு திரும்ப அழைக்கப்பட்டுள்ளனர்.

தேசிய நலன் கருதியும் பாதுகாப்புக் கருதியும் ஐ.பி.எல் போட்டிகள் ஒத்திவைக்கப்படுவதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இமாச்சல் - தரம்சாலாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பஞ்சாப் - டில்லி அணிகளுக்கு இடையேயான போட்டி இரத்துச் செய்யப்பட்ட நிலையில், இரு அணி வீரர்களையும் பாதுகாப்பாக டில்லி அழைத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நடப்பு ஐ.பி.எல் தொடரில் இதுவரை 57 போட்டிகள் முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## இறைச்சி...

விற்பனை நிலையங்கள் மூடப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும் இறைச்சிக் கடைகள், பந்தயம் பிடிக்கும் இடங்கள், சூதாட்ட விடுதிகள் மற்றும் களியாட்ட விடுதிகள் ஆகியவையும் குறித்த நாட்களில் மூடப்பட வேண்டும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

மே மாதம் 10ஆம் திகதி முதல் மே 16 ஆம் திகதி வரை வெசாக் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## நாடு முழுவதும்...

ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த கைது நடவடிக்கையானது நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த சந்தேகநபர்கள் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி 99 பேர் ஹெரோயின் போதைப்பொருளுடன், 221 பேர் ஐஸ் போதைப்பொருளுடன், 85 பேர் கஞ்சா போதைப்பொருளுடன் பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-7,4)

## குடும்பஸ்தர்...

சடலமாக மீட்கப்பட்டவராவார்.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,4)

## தலைவரின்...

மன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி கசிப்பை வழங்கி வெற்றியீட்டியதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன், அமைச்சர் அதனை மீளப் பெற வேண்டும்.

ஒருபோதும் இலங்கைத் தமிழரசுக் கட்சி இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்காது. இதேவேளை புணம் வழங்கி வாக்குகளைப் பெற்ற தரப்பினரும் நாங்கள் இல்லை.

1940ஆம் ஆண்டு காலப்பகுதியில் தந்தை செல்வாவினால் உருவாக்கப்பட்டு 2004ஆம் ஆண்டு மீண்டும் தமிழ் மக்களின் தேசியத் தலைவர் பிரபாகரனால் ஒரு அடையாளமாகத் தரப்பட்ட கட்சிதான் இலங்கைத் தமிழரசுக் கட்சி.

தமிழரசுக் கட்சி எப்போதும் மதுபானத்தை வாங்கி கொடுப்பதோ அல்லது மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்கிய கட்சியோ கிடையாது.

தமிழ்த் தேசியத்தின் இருப்பை, தமிழ்த் தேசியத்தின் அடையாளத்தை, தமிழ் மக்கள் இழந்துபோன இறைமையை மீட்டெடுக்கப் போராடும் ஒரு கட்சி தமிழரசுக் கட்சி” எனத் தெரிவித்தார். (ம-7,4)

## உலங்கு...

விபத்துக்குள்ளானதில் ஆறு பாதுகாப்புப் படை வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

மாதுறு ஓயாவில் உள்ள சிறப்புப் படைப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி முடித்தல் விழாவுடன் இணைந்து நடத்தப்பட்ட நிகழ்வின்போது இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

உலங்குவானூர்தியில் இருந்த அனைத்துப் பணியாளர்களும் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அவர்களில் ஆறு பேர் பொலநறுவை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகவும் விமானப்படை தெரிவித்துள்ளது.

இறந்தவர்களில் இருவர் விமானப்படை துப்பாக்கி ஏந்தியவர்களும் நால்வர் சிறப்புப் படை வீரர்களும் ஆவர்.

இதற்கிடையில் இந்தச் சம்பவம் குறித்து விசாரிக்க இலங்கை விமானப் படைத் தளபதி 9 பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளார். (ம-7,4)

## தமிழ்த்...

அவர் மேற்கண்டவாறுகூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையான சபைகளைக் கைப்பற்றி ஆளும் வகையில் முதல் நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி இருக்கின்றது. அவ்வாறு எமக்கு வாக்களித்துஎம்மை அங்கீகரித்து ஏற்றுக்கொண்ட - ஊக்கமளித்த தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற அனைவருக்கும் வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் எல்லோருக்கும் கட்சி சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மீண்டெழுவதற்கான வாய்ப்பைத் தந்த வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி கூறுகின்றோம். மிகக் கேவலமாகத் தேர்தல் காலத்தில் எங்களை எதிர்த்துப் போட்டியிட்டு, இல்லாதவற்றைச் சொல்லி தங்களின் மகிழ்ச்சியைக் கொண்டாடியவர்கள் இப்போது நாங்கள் தேசிய மக்கள் சக்தியோடு டீல் பேசுகின்றோம் என்று பொறுப்புள்ளவர்களே குறிப்பிட்டுப் பேசுகின்றார்கள். தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் என்ற முறையில் பொறுப்போடு இதனை மறுதலிக்கின்றேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தேசிய மக்கள் சக்தியோடு இணைந்து ஆட்சி அமைப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எந்த டீலையும் செய்யவில்லை. இந்தப் பரப்புரைகள் வேலை செய்யாது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய மக்கள் சக்தியின் முக்கிய பிரமுகர்

நளிந்த ஜயதிஸ்ஸகூட தம்மைத் தமிழ்க் கட்சிகள் அணுகவில்லை என்பதைக் கூறியிருக்கின்றார்.

அடுத்த கட்ட செயற்பாடுகளை ஆராய்வதற்காக இன்று சனிக்கிழமை அரசியல் குழு கூடுகின்றது. எந்தெந்தச் சபைகளில் எவ்வாறு செயற்படுவது?, யார் யாரை முன்னிலைப் படுத்தி தவிசாளர், மேயரைத் தீர்மானிப்பது? பற்றிக் கலந்துரையாடவுள்ளோம். ரெலோ, புளோட் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் எங்கள் கட்சியின் பதில் பொதுச் செயலாளருடன் பேசியுள்ளார்கள். ரெலோவின் தலைவர் செலவம் அடைக்கலநாதன் தாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளார்.

மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம் என்றார். (ம-7,4,33)


மஹஜன சம்பத
திகதி 2025.05.09
சீட்டிழுப்பு இலக்கம் 5826
S 3 8 2 9 6 1
அத சம்பத
S 2 9 6 1
சீட்டிழுப்பு இலக்கம் 0401
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1856
L 33 58 68 77 L
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
Double Chance 35354
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

மெகா பவர்
திகதி 09/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2174
K 26 13 30 50 57
Double Chance
தொலைபேசி: 0112-470662, 0114-607000
இணையம்: www.nlb.lk

NLB ஜய JAYA
திகதி 2025.05.09
சீட்டிழுப்பு இலக்கம் 094
C 1 6 5 5
தேசிய லொத்தர் சபை
கொழும்பு 01
தொலைபேசி: 0112-470662, 0114-607000
இணையம்: www.nlb.lk

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4068
சீட்டிழுப்பு திகதி | 09.05.2025
F 09 38 58 63
F
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.09
சீட்டிழுப்பு இலக்கம் 1135
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 35 38 53 58 மேஷம்
தன யோக இலக்கம் 10918
தேசிய லொத்தர் சபை
நாளுக்கான விதி எண் 10

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.05.2025
வெற்றி வாரம் 534
ஆங்கில எழுத்து P
மற்றும் வெற்றி இலக்கம் 3 4 7 6 5 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.36.973.245.20
82605
DLB
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2800
வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 2025.05.09
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
03 07 26 49 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,057,544.00
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
திகதி 09.05.2025 வெற்றி வாரம் 4961 வர்ணம்
வெற்றி இலக்கங்கள்
29 58 60 75 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,183,908.40
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 61141
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 679
சீட்டிழுப்பு திகதி 09.05.2025
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
03 | 06 | 14
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB
www.dlb.lk

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4512
வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 09.05.2025
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
13 25 49 52
மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,986,446.40
260313
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 20 26 43 50 67
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1976
09.05.2025
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.574,467,470.20
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2626
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி : 2025.05.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,314,464.00
வெற்றி இலக்கங்கள்
23 52 54 66 A
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 644246
DLB
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி தலைக்கு இரத்தம் போகாமை, வாதம் நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)

தொடர்புகளுக்கு : 0777 301 669

(1110)

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறிட் கலவையை தாங்கி நிற்கும் ஜக் முட்டுக்கள் (Steel Props) 10.5 Kg எடை கொண்டது இப்பொழுது எம்மிடம். இதை விட எடை குறைந்ததும், தரம் குறைந்ததும் சந்தையில் இருப்பதால் உங்கள் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

"நாங்கள் உங்களோடு"



ஆர்க் .என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

(4144)

Hotline: 071 535 7799 / 071 535 7803


ஜனாதிபதி அலுவலகத்தின்

# அதி சொகுசு வாகன ஏலத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி அலுவலகத்தின் அதி சொகுசு வாகன ஏலத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்திற்குரிய 27 சொகுசு வாகனங்கள் மற்றும் பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான இரண்டாம் கட்டத்தின் கீழ் விலைமனு கோரப்பட்டுள்ளது.

விற்பனைக்கு உள்ள வாகனங்களில் 1991 முதல் 2016 வரை பல்வேறு ஆண்டு களில் தயாரிக்கப்பட்ட வாகனங்கள் இதில் அடங்கும்.

இந்த வாகனங்களில் இரு BMW வாகனங்கள், 02 போர்ட் எவரெஸ்ட் ஜீப் வண்டி கள், ஒரு ஹூண்டாய் டெரகன் ஜீப், இரு லேண்ட் ரோவர் ஜீப் வண்டிகள், 01 மிட்சுபிஷி மொன்டெரோ, 03 நிசான் பெற்றோல் வகை வண்டிகள், 02 நிசான் கார்கள், ஒரு போர்ஷே (Porsche) கெய்ன் கார், 05 சாங்யோங் ரெக்ஸ்டன் ஜீப் வண்டிகள், 01 லேண்ட் குருசர் சஹாரா ரக ஜீப், 06 வீ 8 ஜீப் மற்றும் 01 மிட்சுபிஷி ரோசா குளிரூட்டப்பட்ட பஸ் அடங்கும்.

இது தொடர்பான விலைமனு ஆவணங்களை மே 14 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை ஜனாதிபதி செயலக செமா கட்டிடத்தின் 2வது மாடியில் உள்ள நிதிப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

மே 14 ஆம் திகதி வரை இலக்கம் 93, ஜாவத்தை வீதியில் அமைந்துள்ள சலுசல நிறுவன வளாகத்தில் இந்த வாகனங்களை பரீட்சிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தின் அதி சொகுசு வாகன ஏலத்தின் முதல் கட்டத்தின் கீழ் முன்னதாக, 14 சொகுசு வாகனங்கள், பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட 06 வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் ஏலம் விடப்பட்டன.

அரசாங்க செலவினங்களைக் குறைத்து நிதிப் பொறுப்புணர்வை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்த வாகனங்களை விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டது. முதற்கட்ட ஏலத்தில், 9 டிபெண்டர் ரக ஜீப் வண்டிகள் உட்பட பல்வேறு வகையான 15 வாகனங்கள் விற்கப்பட்டன.

இந்த வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தின் நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் அல்ல என்பதோடு அரசியலமைப்பின் 41 (1) வது பிரிவின் கீழ் முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள் மற்றும் உத்தியோகஸ்தர்களினால் பயன்படுத்தப்பட்டவையாகும். (ம-4,7)


## மணப்பெண் தேவை

01. வல்வெட்டி, இந்து, 1986, சதயம், Graduate, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
02. வடமராட்சி, இந்து, 1988, மிருகசீரிடம், Business management, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(50001)
03. காரைநகர் - நவாலி, இந்து, 1992, சுவாதி, Graduate, Australia + Newzealand Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (49947)
04. உசன் + பளை, இந்து, 1997, சுவாதி, MSc In structural Engineering, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(49106)
05. புலோலி - கந்தரோடை, இந்து, 1987, பூராடம், MSc in constrction Project management, UK Citizen, Vegetarian, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (50016)
06. கைதடி - ஆவரங்கால், இந்து, 1991, பூசம், ACCA, Accountant UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
07. உடுப்பிட்டி, இந்து, 1990, உத்தரம், Masters CanadaCitizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
08. கோண்டாவில், இந்து, 1990, ரேவதி, PHD, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
09. சண்டிலிப்பாய் - தெல்லிப்பளை, 1988, இந்து, பூரட்டாதி, MBA, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
10. அச்சுவேலி, இந்து, 1990, சதயம், Software Engineer, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(4143)

எம்மிடம் எல்லா ஜாதியிலும், எல்லா நாட்டிலும் Unmarried மற்றும் Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## 50 ஆண்டுகால சேவையில்

E-Son's

மேன்மை

PARLOUR SERVICE

100 பேர் அமரக்கூடிய விசாலமான மண்டபம்

ஈ - சன்ஸ்

148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

021 222 2695 / 077 429 0613

(C-2907)

## Village Hotel

Bus Booking (A/C Bus)

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)

நெல்லியடி → கொடிகாமம் ஊடாக

www.villagehotel.lk

077 544 8503

(3992)

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/- | Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

(C-2933)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

(C-2933)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 218/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 258/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 420/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg கீரி சம்பா அரிசி | - 260/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் (உள்நாடு) | - 217/= | |
| 1Kg கடலை | - 405/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை (உள்நாடு) | - 215/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 245/= | |
| 1Kg அரிசிமா | - 265/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 265/= | |
| 700g சுபோஷா (திரிபோஷா) | - 570/= | ~~590/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |
| 01 லங்கா கறிசோயா | - 115/= | ~~140/=~~ |

400g Anchor 1040/= ~~1100/=~~



1Kg சன்லைட் பவுடர் 280/= ~~320/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(1119)

Happy Supermarket 0777 8080 30

## தேவை

மில் வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும், அனுபவம் உள்ளவர்களும் ஆர்வம் உள்ளவர்களும்

076 440 0816

(1120)

## உடனடி விற்பனைக்கு

40 X 15 அடி கொட்டகையின் பனம் வளைகள் மரங்கள், கொங்கிறீட் தூண்கள், தகரங்கள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

077 309 5176

(C-2935)

## வேலையாள் தேவை

நெல்லியடியில் இயங்கும் லோன்றி ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

மேலதிக விபரங்களுக்கு :

077 923 8940

(C-2932)

## காணி விற்பனைக்கு

சுதுமலை அம்மன் ஆலயத்தில் இருந்து மிக அண்மையில் பிரதான வீதியில் இருந்து 2 ம் காணி 50m 1-பரப்பின் விலை 60,00000/=

076 428 4896

(4130)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.